# 30 வருடங்கள் ஓடிக்கொண்டி இருக்கின்றேன்

காக்கி உடையணிந்த இருவரின் அசைவற்ற உடல்களை தனது இருகைகளாலும் இன்னொரு காக்கி உடையணிந்த உருவம் தன்னால் முடிந்தளவு சிரமத்துடன் இழுத்துக் கொண்டு எமது பெரிய ஒழுங்கையலிருந்து பிரதான வீதிக்கு சென்று கொண்டிருக்கிறது. மக்கள் அங்கும் இங்கும் செய்வதறியாது ஓடிக்கொண்டிருக்கிறார்கள். சில இளைஞர்கள் மட்டும் தமக்குள் ஏதோ இரகசியமாக பேசிச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். நேரமோ மதிய போசனம் முடிந்தநேரம். அந்தப்பெரிய ஒழுங்கையின் ஒரு புறம் கடல், மறுபுறம் காங்கேசன்துறை பிரதான வீதி. எல்லோரும் ஓடிஒழித்துக் கொள்கிறார்கள். பருந்தைக் கண்டதும் தாயைத்தேடி ஓடும் கோழிக்குஞ்சுபோல நானும் அம்மாவைத்தேடி ஓடித்திரிந்தேன். எனது கால்களுக்கு நேரே வீட்டுக்குப்போகத்தெரியாது. எங்கெங்கோ திரிந்துதான் அம்மாவை சென்று அடைக்கலம் புகுந்தன. மிகவும் சந்தடி மிக்கது எனது கிராமம். அந்தப் பகல் பொழுதில் நடுச்சாமத்தில் காணும் மயான அமைதி நிலவியது நாய்கள் ஊளையிடும் சத்தத்தைத் தவிர நிசப்தமே நிலவியது.

நான் அம்மாவை அடைந்த சிறிது நேரத்தில் பாடசாலையில் விளையாட்டுப் போட்டியில் ஊதும் சிவில் சத்தம் பலமாகக் கேட்டது. பெரிய வாகனங்கள் உறுமிக்கொண்டு வந்த எமது கிராமத்தை முற்று கையிடுவதபோன்ற உணர்வு. சற்றே நேரத்தில் கிராமத்தில் காட்டாறென புகுந்த காக்கி உடைகள் மக்களை இழுத்து அடித்து, உதைத்து சித்திரவதை செய்ய ஆரம்பித்தன. மக்கள் பீதியுற்று சிதறி ஓடினர். தங்கள் ஆவேசம் அடங்கியோ அடங்காமலோ என்னவோ அவர்க்ள சிறிது நேரத்தில் யாருடையதோ பணிப்பின் பெரில் நகர்ந்து சென்றனர். அன்று ஊரில் பெரும்பீதி நிலவியது.

சிங்களச் சிப்பாய்களின் அட்டகாசம் அத்துடன் முடியாது என மக்கள் அன்றே புரிந்திருந்தனர். குடிமக்கள் மூட்டை முடிச்சுகளுடன் வீடுகளைவிட்டு புறப்பட்டுக் கொண்டிருந்தனர். எனக்கும் என் சகோதரர்களுக்கும் பயம். ஆனால் எங்கள் அம்மாவோ எமக்கு தைரியம் கூறி வைத்துக்கொண்டிருந்தார். அன்று இரவு அந்தச் சிங்கள சிப்பாய்கள் எமது கிராமத்தையே தீமூட்ஏ முற்றாக நாசம் செய்வது என திட்டமிட்டிருந்தனராம்.

இருள் கௌவிக்கொண்டு வந்தது. ஒருவர் முகம் ஒருவருக்கு தெரியவில்லை. கடற்கரையில் மாலை நேரத்தில் கூடம் மக்கள் ஒருவரையும் அங்கு காணவில்லை. பயம் மிகுதியால் நாம் அழத்தொடங்கினோம். அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு அம்மாகுரல் கொடுத்துப் பார்த்தார். என்ன பயன்? நாம் மயானத்தில் மத்தியில் தனியே இருப்பதான உணர்வு. அம்மா வீட்டுப் பொருள்களை எங்கொங்கோ ஒழித்து பவுத்திரப்படுத்தி வைப்பதுபோல உணர்ந்தேன். பயத்தின் மிகு உணர்ந்தேன். பயத்தின் மிகுதியால் எதையும் சரியாகப் புரிய முடியவிலலை.

இரவோடு இரவாக ஆலடியைக் கடந்து கம்பர் மலையில் உள்ள தலைவர் தங்கராசா என அழைக்கப்படும் என் குடும்பத்திற்கு தெரிந்த ஒருவர் வீட்டிற்கு சென்றடைந்தோம். மறுநாட்காலை திருமதி தங்கராசாஅகதிகளாகிய எமக்கு அவித்து தந்த புட்டும் மையம் கிழங்குப் பொரியயலும் இன்றும் என் நாவில் ஊறுகிறது. காலை நாம் எதிர்பார்த்ததுபோல் ஊரில்எந்த அசம்பாவிதங்களும் நடக்கவில்லை. ஒன்று மட்டும் புரிந்தது. இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி உள்ளுர்த் திருடர்கள் அன்றே தமது கைவரிசையைக் காட்டியிருந்தனர். எமது வீடடிலும் உணவுப் பண்டங்கள் உட்பட துணிமணிகள் காணாமல் போயிருந்தன அம்மா நான் புறப்படும்பொழுது சில சாமான்களை பாதுகாப்புத்தேடி வைத்ததை அப்போதுதான் நினைவு கூர்ந்தேன்.

கடந்த ஒக்டோபர் 16ஆம் திகதி சிறிலங்கா அரசின் வானோலி ஒலிபரப்பினால் வடமராட்சியை விட்டு மக்கள் சாரை சாரையாக கிளம்பிக் கொண்டிருந்தார்கள். தற்சமயம் வீரர் வீதியில் வதியும் நாம் 61ஆம் ஆண்டிலிருந்து ஓடி ஓடிக் களைத்துப்போய் அன்று ஓடுவதில்லை என்று முடிவெடுத்திருந்தோம் அன்று வல்வெட்டித்துறை மக்கள் மட்டுமல்ல முழு வடமராட்சி மக்களுமே வீடுகளை விட்டு தென்மராட்சிக்குப் பொய்க் கொண்டிருந்தனர். அவசரமாக மக்கள் குடிபெயர்ந்தமைக்கு முக்கிய காரணம் இவ்வருடம் தை மாதம் 20 திகதி வல்வையில் நடந்த சம்பவமே. அன்று மக்களை வீடுகளை விட்டு வெளியேறுமாறு 24 மணிநேரத்திற்கு மேல் அவகாசம் கொடுத்ததிற்கு மேல் அவகாசம் கொடுத்த

சிறிலங்கா விமானப்படை 2 மணிநேரத்திற்குள் தனது மூர்க்கமான தாக்குதலை தொடங்கி தொடர்ந்து நான்கு நாட்களாக அராஜகம் புரிந்தது, கிஞ்சித்தேகும் அரசபடைகளில் நம்பிக்கையற்ற மக்கள் குழந்தைகள், வயோதிபர் உட்பட அந்தச் சாமத்திர் எனத வீட்டு வீதியொரத்தால் நடக்க முடியாமல் கையில் கிடைத்ததை எடுத்துக்கொண்டு போன காட்சி அன்று 61ஆம் ஆண்டு சில குடும்பங்கள் ஓடியதை ஞாபகமூட்டியது. இதுவும் ஏதோதான் போலும் என எனக்குள் எண்ணத் தோன்றுகிறது.

விடியற்காலை 3.30 மணி, ஊரே வெறிச்சோடிக்கிடந்தது. நான் ஊரைச் சுற்றி ஒரு வலம் வ்து பார்த்தேன். ஒன்றும் எனக்குப் புரியவில்லை.

அதிகாலையில் நான் பிறந்த குறிச்சியான ஆதிகோவிலடிப் பக்கம் போய் அந்த மண்ணையும் பார்க்க என் உள்ளம் ஏவியது. அந்த மண்ணில்தான் முதல்முதலில் சிறிலங்கா சிப்பாய்களின் கோரக் கொலைகள் நிழ்ந்தன. அமைதியான அந்த சூழலில் எங்கே, எப்போ குண்டுவீச்சு விமானற்கள் வருமோ என்ற சிந்தனையுடன் உலவி வந்த எனக்கு முப்பது வருடங்களுக்கு முன் நான் கண்ட காட்சி அப்படியே என் கண்முன் தோன்றியது. அந்த ஆதிகோவிலடி மண்ணலி அந்த வேளையில் என்னைப் போல ஒருசிலர் டமாட்டத்தை நான் கண்டேன்.

எனக்கு அப்போ வயது பதினொன்று எனது வீடு கடலோரத்தில் இருந்தமையாலும் எமது கிராமத்தின் வறுமை நிலையாலும் எமது வீட்டில் கிணறு இல்லை. வல்வெட்டித்துறைச் சந்தியில் இருந்து மேற்கு நோக்கிச் செல்லும் காங்கேசன்துறை வீதியில் அமைந்த ஆலடியில் குமரகுருவாடி என அஅழைக்கப்படும் வளவிலுள்ள துலாக்கிணற்றில் பெரியவர்கள் குளிக்கும் போது அவர்களின் தண்ணீரை ஏந்தி நானும் குளிப்பேன்.

நேரம் பகல் பன்னிரெண்டு மணி இருக்கும். காக்கி உடை அணிந்த மூன்று பேர்கள் எமக்குப் புரியாத பாஷ‘யில் ஏதேதோ கூறி தெருவில் நின்ற சனங்களையெல்லாம் துரத்திய வண்ணம் போய்க்கொண்டிருந்தனர். அவர்கள் எங்களைத் தாண்டியதும் நானும் றோட்டிலிருந்து கடற்கரையிலுள்ள எனது வீட்டிற்கு ஓடிச்சென்றேன். அங்கு எனது உடுப்பை மாற்றிக் கொண்டு நான் ஆதி கோவிலடிக் கடற்கரையில் அமைந:துள்ள மீன்பிடிச் சங்கத்தால் அமைக்கப்பட்ட பந்தலுக்குப் போகவும் சிங்களச் சிப்பாய்கள் பிரதான வீதியில் இருந்து பெரிய ஒழுங்கை ஊடாக அங்கு வரவும் சரியாக இருந்தது.

கடற்றொழில் முடிந்து திரும்பியவர்கள் அந்தப் பந்தலில் தமது வலைகளைச் சீர்செய்து கொண்டும் ஒருசிலர் பொடுதுபோக்காக அன்றைய தொழிலைப்பற்றி பேசிக்கொண்டும் இருந்தனர். சிலர் களைப்பைப் போக்க பளையாகாரம் அருந்திவிட்டு வந்து அதில் தங்கி வம்பளந்தனர். இப்படிப் பலவிதமான இளையோர், முதியோர் கூடிய கூட்டத்தச் சுற்றி எம்மைப் போன்ற சிறுவர்களும் விளையாடிக்கொண்டு இருந்த அந்த இடத்திற்கே சிப்பாய்கள் வந்து சேர்ந்தனர்.

எமது மண், எமது பந்தல், எமது ஊர் இதில் எவருக்கும் வேறு கருத்து இருக்கவில்லை. தமது வீடுபோலத்தான் சாதாரணமாக அதை எல்லோரும் பாவித்து வந்தனர். சீருடையில் வந்த சிப்பாய்கள் சிங்களத்தில் ஏதோ கூறி அங்குள்ளவர்களை துரத்தினர், அடித்து துன்புறுத்தவும் தொடங்கினார்கள். இளங்கன்று பயமறியாது என்பார்களே அந்த நிலையோ எமது சொந்த மண்ணில் இருந்து எம்மை அடித்துத் துரத்த இவர்கள் யார்? என்ற ஆவேசமோ தெரியாது. அக்கூட்டத்தில் இருந்த ஒருசில இளைஞர்களுடைய கண்கள் பேசின. மறுகணம் சிங்களச் சிப்பாய்கள் மடக்கிப் பிடிக்கப்பட்டனர். பஞ்சலிங்கம் ஒரு சிப்பாயை அப்படியே தூக்கி நிலத்தில் போட்டு அடித்துப் பந்தாடினார். அந்த இடத்தில் அழகையா, இராமசாமி சகோதரர்கள் மற்றும் சோதிலிங்களம் ஆகியவர்களை இச் சண்டையில் ஈடுபட்டதை என்னால் இன்றும் ஞாபகப்படுத்த முடிகிறது.

சண்டை தொடங்கியதும் பாதுகாப்புத் தேடி பெரிய ஒழுங்கையால் ஓடிச்சென்று பாலசிங்கம் என்பவரின் வீட்டிற்குள் புகுந்து வேலியால் பார்த்துக்கொண்டிருந்தேன். மடக்கிப்பிடிக்கப்பட்ட மூன்று சிபாய்களுள் ஒருவன் துப்பாக்கியுடன் தப்பிவந்து நான் நின்றவீட்டு வேலியுடன் நின்று துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்துக் கொண்டிருந்தான். அந்த வீட்டிற்கு கிழக்குப்புறமாக இருக்கும் ஒரு சிறு ஒழுங்கையால் வந்த மார்க்கண்டு பெரிய மீன்களைத் தூக்கி வள்ளத்தில் போடும் கொழுவியால் வேட்டுக்களைத் தீர்கும் சிப்பாய்கள் பின்புறத்தால் வந்து கழுத:துக்கு குறிஜ வைத்து கொழுவி

இழுத்தார். அந்தே பரிதாபம் அவர்குறி தவறிற்று சிப்பாயின் குறி தவறவில்லை அவன் தீரம்பி இவரை சுட்டுவிட்டான் பின்பு அவரது வாய்க்குள் புகுந்து அலகால் வெளியில் வந்தது சிப்பாய் திரும்பவும் சம்பவம் நடந்த இடத்திற்கு சென்று புத்துயிராக இருந்த இரத்தம் தோய்ந்த இரு சிப்பாய்களையும் தனது இரு கரங்களாலும் அணைத்தபடி செரசெர என இருத்துக்கொண்டு பிரதான வீதிக்கு வந்து விசில் அடித்து தனது அபாயத்தை தூரத்தில் இருக்கும் ஏனைய சிப்பாய்களுக்கு தெரியப்படுத்தினான் சிறிது நேரத்தில் பேரிரைச்சலுடன் வாகனங்கள் நிறைய சிப்பாய்கள் வந்து ஊரைச் சூழந்து கொண்டார்கள்.

நம்மவரிடம் அனுப்பட்ட சிப்பாய்களை ஒருவரை இராமசாமி ஆட்டுக்கு சீக்காய் சீவிக்கொண்டு இருந்த பாளைக் கத்தியால் கண்டபடி வெட்டியதால் அவனுடைய மூக்கும் காதும் அறுக்கப்பட்டு அவன் அந்த இடத்தில் இறந்ததாக பின்தாக அறிந்தேன். மற்றைய சிப்பாய் யாழ் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு இறந்தார். இச்சண்டையில் அழகையா என்பவருக்கு பட்ட துப்பாக்கி ரவை அவரது தோல்பட்டைக்கு கீழ் கமக்கட்டத்தில் காயத்தை ஏற்படுத்தியது காயப்பட்ட நம் இரவரும் உயிர் பிழைத்துக் கொண்டனர் மார்க்கண்டு பின்னர் இயற்கை மரணம் அடைந்தார்.

இதை எழுதிய முடிக்கும் தறுவாயில் சோதிலிங்கம் என்பவரை நேரில் கண்டு இது பற்றிக் கேட்டபோது பின்வருமாறு விபரித்தார். டேய் மச்சான் அது சத்தியா கிரககாலத்திலே நாங்கள் கறுத்தக்கொடி கட்டி எமது எதிர்ப்புக்களை சிங்கள அரசாங்கத்துக்கு தெரியப்படுத்தினோம். அப்பொழுதான் இவர்கள் வந்து கறுத்தக்கொடிகளை எங்களைக் கொண்டு அறுப்பித்து பின்னர் எங்கட ஊருக்குள் புகுந்து இங்கு அட்டகாசம் புரிந்தவர்கள் அவன் பஞ்சலிங்கம் கட்டிப்பிடிக்க நான் ஒருவனுக்கு இரண்டு கல்லுகளால் தலையிலும் முகத்திலும் குத்தினேன். அவன் இரத்தம் ஓடிச் செத்துப்போக எனக்கு மனம் ஒருமாதிரிப்போயிற்று சொத்வருடைய துவக்கை இழுத்துப்பார்த்தேன் அது நல்லா கொழுவுப்பட்டு இருந்ததால வரமாட்டன் என்று இருந்தது. ஆனால் இராமசாமி பாளைக்கத்தியால் அவன் வெலிற்ரை வெட்டி துவக்கை எடுத்து முடிறித்துப்போட்டு அதற்குரிய துண்டுகளையும் கொண்டுபோய் கடலுக்குள் எறிந்து விட்டார். மச்சான் இவர்கள் இப்பவந்தலும் நான் எதிர்த்து பேராடத் தயார் என்று அன்று நடந்த சம்பவத்தை ஞாபகப்படுத்தினார்.

சிறிலங்கா ஆதிக்க வெறியர் முதன்முதலில் இம் மண்ணில் காலடி எடுத்து வைத்த அன்றே தகுந்த பாடம் படிப்பிடித்த இந்தமண்ணின் அந்த மைந்தர்களும் இம் மாவீரர் வாரத்தில் நளைவு கூறப்பட வேண்டியவர்களே.

# அமெரிக்காவுக்கு “மைலாய்”
# இந்தியாவுக்கு ஒரு “வல்லை”

## திட்டமிடப்பட்ட மூன்று நாள் படுகொலைகள்

1989 ஒகஸ்ட் மாதம் இரண்டாம் திகதி, நடக்கப்போகும் அனர்த்தம் குறித்து எந்த முன்னறிவிப்பும் இன்றி வல்வெட்டித்துறை நகரம் அமைதியாக விழித்தது. காலைச் சுறுசுறுப்பில் மக்கள் அனைவரும் முழ்கிருந்தனர். அவர்களுக்கு தங்கள் தங்கள் அவசரம். ஆனால், திடீரென அந்த அமைதியைக் குலைத்தன துப்பாக்கி வேட்டொலிகள் அவை! ஒரு ஜாதியன் வாலாபாக் படுகொலைகள் மைலாய் படுகொலைகள் போன்று வல்வெட்டித்துறையிலும் ஒரு வரலாற்றுப் புகழ்பெற்ற படுகொலைகள் இடம்பெற அச்சாரம் இட்டன.

இந்திய இராணுவத்தினரை போராளிகள் சுட்டுவிட்டனராம் செய்தி வேகமாக பரவியது சுற்றுவட்டாரத்தில் அமைதி குலைந்தது. பதற்றமும் பீதியும் தெற்றிக்கொண்டன தாக்குதலுக்கு பழிதீர்க்க கங்கணம் கட்டிக்கொண்ட இந்திய இராணுவத்தால் முடிந்ததெல்லாம் அப்பாவிகளை கொன்று குவித்ததும் அவர்களின் சொத்துக்களை நாசமாக்கியதும் தான்.

மிகநான்று திட்டமிட்டு மூன்று நாட்கள் ஊரங்டகு உத்தரவு பிறப்பித்து தன் ரத்தப்பசியை வல்வெட்டித்துறை அப்பாவிகளிடன் தீர்த்துக்கொண்டது. உலகில் நான்காது பெரிய இராணுவம் என்று பெருமை பேசிய இந்திய இராணுவம்.

இங்கு அமைதிக்காக வந்தவர்கள் வல்வெட்டித்துறையின் அமைதியைக் குலைத்து அதனை இரத்ததால் குளிப்பாட்டி புகைமண்டலத்தால் மூடினார்கள்.

இந்தியாவை நம்பிய மக்களின் எதிர்பார்ப்புக்களை மீண்டும் ஒரு தடவை தன் இராணுவப்பூச்சுக்களால் நசுக்கியது இந்திய அமைதிப்படை.

1989 ஒகஸ்ட் 2ம், 3ம், 4ம் திகதிகளில் இந்திய இராணுவம் நிகழ்த்திய படுகொலைகளும் ஞாபகார்த்த தினங்களின் ஆரம்பம் இன்றாகும். அதனை ஒட்டி இந்த ஆக்கம் பிரசுரிக்கப்படுகின்றது.

இலங்கை வங்கி ஸ்ரான்லிவீதிக்கிளையில் தற்போது முகாமையாளராக பணியாற்றுபவரும் இந்தப்படுகொலைகளால் நேரடியாக பாதிக்கப்பட்டவருமான என்.சிவரத்தினம், அன்று அவலங்கள் குறித்தும் அதன்பின்னர் இந்திய இரர்ணுவ

இங்கு யாராவது வல்வை குடிமகன் இருக்கின்றாரா? (ஐள வாநசந யலெடிழனல கசழஅ ஏயடஎநவவவைரசயை) நான் இதுவரை நேரமுழ் வல்வெட்டித்துறையில் புலிகள் நடத்திய தாக்குதலில் உங்களை பாதுகாக்க வந்த இந்தியப்படை வீரர்கள் படுகொலை செய்யப்பட்டதையும் அவர்களால் ஏற்பட்ட அனர்த்தங்களையும் பற்றிக் கூறிக்கொண்டிருக்கிறேன். இது பற்றி ஏன் ஒருவரும் கேள்வி கேட்கவில்லை? ஆம் நீங்கள் கேட்கவேண்டிய அவசியம் இல்லை காரணம் நான் இப்பகுதி முழுவதற்குமே பொறுப்பான இந்திய நன்நாட்டின் குடிமகனான ஒரு கட்டளைத் தளபதி (லுழர ாயளந டிநடடைநிடிந ராயவ ஐ சநடயவந டிநஉயரளந ஐ யஅ ய டீசபையனநைச ழக ஐ.ீ.மு.கு).

ஆம் இவ்வாழ்க்கைகளை ஆணவத்துடன் கூறியவர், இந்திய படை வடமராட்சியை ஆக்கிரமித்து இருந்த காலப்பகுதியில் அப்பகுதி கட்டளை அதிகாரியாக பணியாற்றிய பிரிகேடியர் சாகர் பிரசாத் (டீசபையனநைச ளுயமயச ீசயளயன)-மந்திகை வைத்தியசாலையை அண்டி அதன்பின்புறத்தில் அமைக்கபட்டிருந்த அப்பகுதி இநதிய அமைதிப்படை (ஐ.ீ.மு.கு) அதிகாரியின் இடத்திலே வலுக்கட்டாயமாக அழைத்துச்செல்லப்பட்டு கட்டளை அதிகாரியால் நடத்தப்பட்ட பொதுமக்கள்

சந்திப்பிற்கான கூட்டத்தில் ஓகஸ்ட் 7ம் திகதி 1989ம் ஆண்டில் இவை கூறப்பட்டன.
அந்த பிறிகேடியர் அக்கூட்டத்தில் மேலும் பேசியதாவது :-

ஓகஸ்ட் 2ம் திகதி காலையில் வல்வெட்டித்துறை சிவபுர வீதியில் உள்ள பெற்றோல் நிலையத்தின் அருகே எமது வீரர்கள் பலர் புலிகளால் படுகொலை செய்யப்பட்டதை அறிந்த நான் காலை 11 மணியளவில் அங்கு சென்று பார்த்த பாழுது புலிகளின் தாக்குதலில் எமது படைவீரர்கள் மட்டுமல்ல படைவீரர்களும் கொலைசெய்யப்பட்டனர். இதனால் ஆத்திரமடைந்த ஏனைய வீரர்கள் புலிகளை தேடி வேட்டை நடத்தியதில் சில அனர்த்தங்கள் ஏற்பட்டதாகவும் கூறப்பட்டது. ஆனால் நான் அங்கு சென்ற சிலநிமிடங்களில் நிலைமையை கட்டுப்படுத்தி பொதுமக்களுக்கு பாதுகாப்பு அளித்து எனது கடமையை நிறைவேற்றினேன். எனது செயற்பாடுகளும் கட்டளைகளும் இன்றேல் எத்தனையோ பெரிய அனர்த்தங்கள் நடந்திருக்கும் - என்றார்.

என்னைப்பற்றியும் என்பதவியைப்பற்றியும் அதனை எனக்கு தந்த இந்திய நாட்டைப்பற்றியும் அவர் பெருமையுடன் கூறிக்கொண்டிருக்க பெட்டிக்குள் அகப்பட்ட நாகம்போல கூட்டத்தில் உள்ள அனைவரும் மகுடிக்கு அடங்கிய பாம்புகளாகவே இருந்தனர்.

இச் சந்தர்ப்பத்திலே தான் “இங்கே யாராவது வல்வெட்டித்துறையைச் சேர்ந்தோர் இருக்கின்றனரா? என்ற கேள்வி கேட்கப்பட்டது. அக்கூட்டத்தில் ஒருவராக - நான் இருந்தேன். நான் பணியாற்றும் இலங்கை வங்கி கிளையின் முகாமையாளரான எஸ்.மகாலிங்கம் சைகையில் இதுவரை நேரமும் என்மனக் குமுறலை அடக்கியிருந்தார். எனினும், பின்னர் எனக்கு அவராகவே ஒரு சந்தர்ப்பத்தைத் தந்தார். அந்த பிரிகேரியரிடம் எனக்கு கிடைத்த நம்பகமான தகவல்களின்படி காலை 11 மணிக்குப் பின்பே படுமோசமாக கொலைகள் அங்கு நடத்திருக்கின்றன. வீடுகளில் இருந்தவர்களை வெளியே இழுத்துவந்து சுட்டுக்கொலை செய்தும், மீனவர்களை அவர்களின் வள்ளங்களுக்குள் போட்டு உயிருடன் எரித்து, கடையினுள் வியாபாரிகளை வைத்துக் கடையைப் பூட்டி அதைத் தீ மூட்டி எரித்தும் அட்டூழியம் புரிந்ததாக அறிகிறேன்.

எனவே, தயவுசெய்து நீங்கள் ஒரு நெர்மையான - மதப்புள்ள கட்டளை அதிகாரி என்ற வகையில் காலை 11 மணிக்குப் பின், அதாவது நீங்கள் சம்பவ இடத்துக்குப் பொன பின்னர் எந்தப்படுகொலையும் நடக்கவில்லை என்னும் கூற்றை இச்சைபயில் மிண்டும் ஒரு தடவை உறுதிப்படுத்த முடியுமா? என்று அவர் கேட்டார்.

“நிச்சயமாக, நான் ஒரு பொறுப்பு வாய்ந்த கட்டளை அதிகாரி. எனது அலுவலகம் யாக்கரையில் உள்ளது. மாதாந்தம் நடக்கும் பொதுமக்கள் கூட்டத்திலும் நான் இந்திய இராணுவத்தின் கட்டுப்பாடு பற்றியும் கூறிவருவதை நீங்கள் அறியாமலிருக்க இச்சந்தர்பத்தை வாய்ப்பாகப் பயன்படுத்திய நான் பின்வருமாறு கூறினேன்.

தயவுசெய்து எனக்கு இச்சபையில் இருந்து கதைப்பதற்கு இனுமதி தாருங்கள். ஏனெனில் உங்களையோ அன்றி எந்த இந்திய சிப்பாயைக் கண்டாலும் எனத உடல் நடுங்குகிறது. இதைக்கேட்ட பிரிகேடியர் பயப்பட வேண்டாம். நீங்கள் இருந்தே கதைக்கலாம் என்றார். எனது முகாமையளர் கேட்ட அதே கேள்வியைக் கேட்டு மீண்டும் அவர் வாயினால் “தான் பொனபின் எந்த அசம்பாவிதங்களும் நடைபெறவில்லை” என்ற உறுதிப்பாட்டை நானும் பெற்றுக்கொண்டேன்.

தொடர்ந்து நான் சபையைப் பார்த்து இவ்வாறு கூறினேன். “இலங்கைத் தீவில் வல்வெட்டித்துஜறயில் வாழும் ஒரு சாதாரண குடிமகன் கூறுவது உண்மையா? அல்லது இந்தியப் பெருநாட்டின் உலகின் 4ஆவது பெரிய இராணுவ பலம் கொண்ட இராணுவத்தின் கட்டளைத் தளபதியாகக் கடமை புரியும் ஒரு பிரிகேடியர் கூறுவது உண்மையா என்பதை இப்போது பார்ப்போம் தொடர்ந்து நான் சபையைப்பார்த்து இவ்வாறு கூறினேன். “இலங்கைத்தீவில் வல்வெட்டித்துறையில் வாழும் ஒரு சாதாரண குடிமகன் கூறுவது உண்மையா? அல்லது இந்தியப் பெருநாட்டின் - உலகின் 4ஆவது பெரிய இராணுவ பலம் கொண்ட இராணுவத்தின் கட்டளைத் தளபதியாகக் கடமை புரியும் ஒரு பிரிகேடியர் கூறுவது உண்மையா என்பதை இப்போ பார்ப்போம்”

நான் அங்கு இவ்வாறு கூறினேன். “நான் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த குடிமகன். எனது சொந்த

வீடே எரிக்கப்பட்டுள்ளது. அங்கு எனது மாமா, மாமியார் வசித்து வந்தனர். எனது மோட்டார் கார் உட்பட சகல சொத்துக்களும் எரிந்து நாசமாக்கப்பட்டுள்ளன. இவைதான் போகட்டும் எங்கள் வீட்டில் அடைக்கலம் தேடிவந்த எமது உறவினர்களை நாம் வசித்து வந்த மைத்துணியின் வீட்டின் உள்ளேயே கையெடுத்து கும்பிட கும்பிட மனைவி பிள்ளைகள் மற்றும் அவர்கள் உறவினர்கள் முன்னிலையில் சுட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றார்கள். இவை யாவும் நடைபெற்றது 02.08.1980 அன்று பிற்பகல் 2.00 மணிக்கு பின்னரே அதுமட்டுமா இந்தியா அமைதிப்படையினர் தொடர்ந்து மூன்று நாட்கள் ஊரடங்கு உத்தரவினை பிறப்பித்து ஏராளமான உயிர்களை மிகவும் நாகரீகமற்ற முறையில் காட்டுமிராண்டித்தனமாக கொலைசெய்ததுடன் கோடிக்கணக்கான சொத்துக்களையும் உடமைகளையும் எரித்து நாசப்படுத்தியுள்ளனர் என்றேன்.

எதிர்பாராத இவற்றை கேட்ட பிறிகேடியர் சங்கர் பிரசாத் நீர் வல்வெட்டித்துறையா எனக்கேட்டதுடன் ஏன் முதலில் நான் கேட்டபோது அதுபற்றி தெரிவிக்கவில்லை எனவும் அதட்டலாக வினவினார். “எனது முகாமையாளரின் வேண்டுதலின் காரணமாக நான் வி.வி.ரியைச் சேர்ந்தவர் என்பதைக் கூறவில்லை” என்று கூறினேன்.

ஒரு சில மாதங்களுக்கு முன்னர் இந்த பிரிகேடியர் முன் சமுகமளித்திருந்த பிரஜைகள் குழு உறுப்பினர்களுக்குஅவர் பின்வருமாறு கூறியதாகவும் நான் அறிந்திருந்தேன். “இந்திய இராணுவத்தினர் மீது புலிகள் தாக்குதலை மேற்கொண்டால் வடமராட்சியின் முழுக்கிராமங்களையும் எரிப்பேன்... நூற்றுக் கணக்கில் சுட்டுத்தள்ளுவேன்... இராம - இராவண யுத்தத்தால் இலங்கை எரிந்தது போல மீண்டும் இலங்கை எரியும்... எங்களை எவரும் எதுவும் செய்துவிட முடியாது நாங்கள் உலகின் நான்காவது பெரிய இராணும் என்று இவர் கூறியிருந்தார். பிரிகேடியரின் அனுமதிக்காக காத்திருக்காமல் அச்சபையில் நான் தொடர்ந்து உரக்கக்கூறினேன் “பருத்துறையில் இருந்து வந்து அடைக்கலம் தேடி எம்முடன் வாழந்து வந்த என்மனைவியின் பெரிய தந்தையானவரும் இணைப்பாறிய தபால் அதிபருமான 62வயது இராசமாணிக்கம் நடராசா மற்றும் அவரின் சகோதரியின் மகனான இலங்கை சீமந்து கூட்டுத்தாபனத்தில் வேலைசெய்யும் 28வயதான தி.அருட்சோதி என்பவரையும் ஒன்றுவிட்ட உறவினர்களின் முன்னிலையிலேயே துடிக்க துடிக்க சுட்டுக்கொன்றுள்ளார்கள். அத்துடன் விட்டார்களா எனது வீட்டையே நெருப்பு வைத்து எரித்தார்கள் அத்தீயை அணைக்க முற்பட்ட எனது மனைவியை துரத்தி அடித்தார்கள் சம்பவம் நடந்த இடம் (இத்தனையும் நடந்தது இன்று தீருவில் குமரப்பா, புலேந்திரன் போன்ற வீரவேங்கைகளின் நினைவுத் தூபி அமைந்திருக்கும் இடத்தில் புலிகளுக்கும் இந்திய இராணுவத்துக்கும் இடையில் சண்டை நடந்த வல்வைச் சந்தியில் இருந்து எத்தனையே ஒழுங்கை கடந்து அமைந்துள்ளது. அதுமட்டுமல்ல இச்சம்பவம் 02.08.1989 பிற்பகல் 2.00 மணிக்கு பின்பே நடைபெற்றது.

3 நாள்கள் தொடர்ந்து ஊரடங்கு இருந்ததால் என்னால் வீட்டுக்கு போகமுடியவில்லை. நான் 4ம் திகதி பிற்பகல் 4.00 மணியளவில் முதலாவது ஆளாக அங்கு சென்றதும் என் மனைவி பிள்ளைகள் உட்பட உறவினர்கள் மரண ஓலமிட்டனர் அந்த நேரத்திலும் இந்தியப்படையினர் வல்வையில் இருந்து விலகிச்சென்றிரக்கவில்லை.

3 தினாங்களாக கிடந்து அழுகிய நிலையில் இருந்த இரு சடலங்களை மனைவி, பிள்ளைகளின் உதவியுடன் நான்னே எடுத:து வீதியேரத்தல் போட்டு எரிததேன் விறகு இல்லாமையினால் வீட்டியில் இருந்த வாங்கு மற்றும் தளபாடங்களையும் போட்டு சடலங்களுக்கு தீ மூட்டினேன் இந்த நிலையில் சடலங்களை எரிக்க வாகன ரயர் இருந்தால் நல்லது என அடுத்த ஒழுங்கைக்கு தேடிப்போனபோது ஆங்காங்கே சடலங்கள் அழுகிய நிலையில் கிடந்தன எனவே வேறு சிலரின் உதவியுடன் வேறு நான்கு சடலங்களை கொணர்ந்து நான் ஏற்கனவே எரித்த சடலங்களுடன் போட்டு எரித்தேன்.

“இந்நிலையில் மீண்டும் மூன்று டுமீல் டுமீல்...” என சத்தம் கேட்டது பீதியில் இருந்த குடும்பத்தினர் என்னை கட்டிப்பிடித்து அழுதனர். அதனால் அவர்கள் அனைவரையும் அழைத்துச்சென்று நெடிய காட்டு வேவிற்பிள்ளையார் கோவிலில் நிறுத்திவிட்டு மீண்டும் சடலங்களை எரிப்பதில் ஈடுபட்டேன். நான் வரும்போது ஒரு சடலம் நிமிர்ந்திருப்பதைக் கண்டு துணுக்குற்றேன் தைரீயத்துடன் கிட்ட சென்று பார்த்தபோது அது தீருவில் ஒழுங்கையில் வசித்து வந்த பெரியசாந்தன் என்னும் பொ.சண்முகலிங்கத்தினுடையது என அழையாளம் கண்டுகொண்டேன். அதுமட்டுமா இடியப்பம் புளியும்போது அதில் உள்ள மா வெளியே வந்து வளைந்து வளைந்து விழுவதுபோல துப்பாக்கிச்

சன்னங்களால் ஏற்பட்ட பல துவாரங்களின் ஊடாக அவரது சிவந்த வயிற்றுப் பகுதியில் இருந்து குடல்கள் வெப்பத்தினூடாக வெளியே வந்து நெளிந்து நெளிந்து விழுந்து கொண்டிருந்தன. இவை யாவும் அத்தனை சடலங்களையும் எரிக்கப் போதியவிறகு இன்மையாலேயே" - என்று எனது அனுபவத்தின் ஒரு பகுதியை அந்த பிரிகேடியர் முன்னிலையில் அவேசத்துடன் கூறி முடித்தேன்.

மந்திகை முகாமில் பொதுமக்கள் மன்னிலையில் என் வார்த்தைகளைக் கேட்ட பிரிகேடியர் எஉம்முடைய வீடு எற்கே எனக் குறிப்பாக சொல்லும்படி கேட்டார். நான் தூபியின் அடையாளத்தை குறித்துக் கூறியபோது "ஓ! அந்த வீடா! அந்த வீட்டில் புலிகள் இருந்தார்களே அவர்கள் அங்கிருந்து பக்கத்திலிருந்த இராணுவத்தினர் புகுந்தார்கள்." என்றார்.

அப்படியானால் 62 வயது தபாலதிபரும், அவரது மருமகன் சீமெந்து கூட்டுத்தாபனத் தொழிலளியும் தான் அந்த புலிகளா? என நான் திருப்பிக்கேட்டேன். அதற்கு பதில் கொல்லாத பிடிகேடியர், வல்வெட்டிததுறையில் உள்ள உரமுள்ளவர்கள் பொலத்தான் மராட்டியர்கள் என்றும், அங்கு நிலை கொண்டிருந்ததும் மராட்டியர்கள்தான் என்றும், இதுவரையில் நீங்கள் தப்பியதே பெரிய காரியம் என்பது போலவும் கூறினார்.

அதன்பின்னர் இந்த விடயத்தில் இருந்து நழுவிய தளபதியோ, நான் இங்கு வல்வை விடயங்களை மட்டும் பற்றி கதைக்க வரவில்லை எனக்கு வேறு பல விடயங்கள் பற்றியும் இங்கு பேச உள்ளது என நகூக்காகத் தப்பிவிட்டார்.

அக்கூட்டம் ஒருவாறு முடித்த பன் அந்த குறித்த மகாமின் அதிகாரி என்னை தனியே அழைதது அதாவது அந்த பிரிகெடியர் முன் அப்படிக் கதைப்பதை தவிர்த்திருக்கலாம். என்னவெல்லாம் பின் விளைவுகள் ஏற்படப் போகிறதோ நான் அறியேன் - என்றார். உண்மையில் அவர்கூறியது போல பாரதூரமான உயிராபத்தான பல பின்விளைவுகளை நான் அனுபவித்தது பிறிதொரு கதை.

இந்த அநீதிகளினால் என் மனைவி, பிள்ளைகள் தவிர ஏனையவர்கள் வல்வையை விட்டு கொழும்புக்கும், ஏனைய பிற இடங்களுக்கும் சென்றுவிட்டனர் இத்தாக்கத்தினால் என் 11 மாதக் குழந்தைக்கு பாலூட்டும் சக்தியை அன்றிலிருந்தே என் மனைவி இழந்துவிட்டாள்.

இவைகள் என் சொந்த அனுபவங்கள் . இப்படியாக வல்வையை மட்டுமல்ல அதனை சூழவுள்ள கிராமங்களான கம்பர்மலை, வல்வெட்டி, பொலிகண்டி, உடுப்பிட்டி போன்ற பல கிராமங்களை சேர்ந்தவர்களும் பாதிக்கப்பட்டு தமக்கென பல திகிலூட்டும் சோக கதைகளை திரு.ந.அனந்தராஜ் எழுதிய "வல்வைப் படுகொலைகள்" நூலில் நீங்கள் காணலாம்.

அன்று சேகரித்த தகவல்களின் படி ஏற்பட்ட சேதங்கள் வருமாறு. ஆனால் கணக்கில் சேர்த்து கொள்ளப்படாமை எத்தனையோ உண்டு.

1.படுகொலைகள் - 63
2. வீடு எரிப்புக்கள் - 123
3. கடை எரிப்புக்கள் - 45
4. கடற்றொழில் படகுகளும் மீன்பிடி வலைகளும் நாசமாக்கப்பட்டவை - 176.

## இந்தப் படுகொலைகள் குறித்து வெளியுலகப் பத்திரிகைகள் இவற்றின் பார்வை.... "தி கார்டியன்"

லண்டனில் இருந்து வெளியாகும் "தி கார்டியன்" என்ற பத்திரிகையில் அதன் கொழும்பு நிருபரான கிறிஸ்நற்றோல் பின்வருமாறு எழுதியுள்ளார். ஸ்ரீலங்காவின் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் கடந்த இரண்டு வருடங்களாக நிலை கொண்டுள்ள இந்திய அமைதிப்படையிரின் மிகவும் மோசமான ஒரு நடவடிக்கையில் 51 தமிழ் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

மூன்று நாள்களாக ஊரங்க உத்தரவைப் பிறப்பித்து இந்தப் படுகொலைகள் பற்றிய விவரங்கள்

வெளியே தெரியாதவாறு இந்தியப் படையினர் மூடி மறைத்துள்ளனர். இந்தத் தாக்குதலில் அந்தக் கிராமத்தையே அழிப்பதற்கு முயற்சி செய்துள்ளதுடன் வைத்தியர் குழுவைக் கூட செல்வதற்கு அனுமதிக்கவில்லை.

வல்வெட்டித்துறையே, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் பிறந்த ஊராக இருப்பதாலும், பல விடுதலைப்புலிகளின் போராளிகள் இங்கிருந்தே ஒருவாக்கப்படுவதாலும் பழிவாற்கும் ஒரு செயலாகவே இத் தாக்குதல் அமைந்துள்ளது.

இதில் பெண்கள், குழந்தைகள் உட்பட 51 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். பெரும்பாலனவர்கள் தமது கையையோ, காலையோ இழக்கும் நிலையில் படுகாயமடைந்துள்ளனர். இந்நகரத்தில் பெரும்பாலானவர்கள் இடப்பெயர்ந்துள்ளதால் இது பொழுது பாலைவனம்போல் காட்சியளிக்கின்றது. 5000 இற்கும் மேற்பட்ட மக்கள் ஆலயங்களிலும், தேவாலயங்களிலும், பாடசாலைகளிலும் அகதிகளாகத் தஞ்சம் அடைந்துள்ளனர்.

உதவிப் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்கள் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் (ருசேர்ஊசு)இ செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றிற்கு நிவாரண உதவி கோரி விண்ணப்பித்துள்ளனர். “இலங்கையில் உள்ள தமிழர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே இந்தியா டை விலகலைச் செய்யும் என்று இன்றும் கூறிக்கொண்டிருப்பதன் மூலம், இலங்கை அரசாங்கத்தின் விருப்பதற்கு மாறாக இந்தியா தனது படைகளை மேலும் அங்கு வைத்திருப்பதற்கு நியாயம் கற்பிக்க முயல்கின்றது.

“தி இந்தியன் எக்ஸ்பிறஸ்”

இந்திய அமைதிப்படையினர், தமது வீரர்கள் 6பேர் விடுதலைப்புலிகளினால் கொல்லப்பட்டளதைத தொடர்ந்து எதிர் நடவடிக்கைகளில் ஈடுபட்டதில் நிராயுதப்பாணிகளுடன் ஐம்பதுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர். வல்வெட்டித்துறை இப்பொழுது பாலைவனமாகக் காட்சியளிக்கின்றது. சனத்தொகையில அரைவாசிப்பேர் இடம்பெயர்ந்து அயற்கிராமங்களுக்குச் சென்றுவிட்டனர்.

50 பொதுமக்கள் கொல்லப்பட்டும், 12பேர் காணாமற்போயும், 123 வீடுகளும், மீன்பிடி உபகரணங்களும், சைக்கிள்கள் உட்பட 50க்கு மேற்பட்ட வாகனங்கள் எரிக்கப்பட்டும் உள்ளன. எரிக்கப்பட்ட வீடுகளில் காந்தி, நேரு, சுபாஸ் சந்திரபோஸ் போன்ற இந்தியாவின் தலைசிறந்த தலைவர்களின் படங்கள் கூட எரித்து நொருக்கப்பட்டுள்ளன.

இந்திய இராணுவத்தினர் தம்மை எதிர்ப்பவர்களை அழிக்காது அப்பாவி மக்களை எதிர்த்து அழிக்கும் கொலைகாரப் படையாகத்தான் அங்கு இப்பொழுது இருக்கின்றது. 1982 செப்ரெம்பர் 3ஆம் திகதி வெளியான இநதியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் அதன் நிருபரான றீற்றர் செபஸ்ரியன் விசெட அறிக்கையாகக் குறிப்பிட்டுள்ளார்.

# வல்வை மண் மீண்டும் எழும்!

1987இல் இந்திய அமைதிப்படை இலங்கைக்கு வந்தபோது யாழ்ப்பாணத்தில் “சயனைட்” அருந்தி வீரச்சாவடைந்த குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளின் ஞாபகார்த்தமாக வல்வை தீருவில் மைதானத்தில் அமைக்கப்பட்ட நினைவுத்தூபி கடந்த 1996ஆம், ஆண்டு ஸ்ரீலங்காப் படைகளால் துவசம் செய்யப்பட்ட சம்பவததை நினைவு கூர்கிறார் கட்டுரையாளர். தற்போது இந்தத் தூபி அங்கு மீள நிர்மணிக்கப்படுகிறது.

இரண்டு தசாப்பதங்களுக்கு மேலாகப் போரில் தாக்கங்களைப் புதைத்து வைக்காத தமிழீழகத்தின் ஒரு பகுதி கூட இன்றில்லை. துல்லியமாகக் கூறின் வங்கக்கடலே வாய் திறந்து நீ முத்தமிட்டுச் செல்வாயே! சப்தமிட்டுக்கூறு.

நீலிவிழிக்கண்ணீரால் ஈழத்தமிழர் நெஞ்சங்களை கழுவிவிடலாம் எனப் பசுத்தோல் போர்த்து வந்த பாரதமே படிக்கவில்லையா நீ! எம் தலைவர் சுதமலையிற்கூறிய வார்த்தைகளை. “ஈழத்தமிழரை இனிப் பாரதத்தின் கைகளில் ஒப்படைக்கிறேன்” என்று மனமின்றிக் கூறிய அந்தச் செய்தி பத்திரிகைக்குப் போய் ஈரமைகாய்வதற்குள் ஈவிரக்கமற்ற நரிவேடம் போட்ட அந்த ஜே.ஆர். கதைகேட்டு நம்பன்னிருவரைப் பறித்தாயே.

புலேந்தி அம்மான் என்றால் எங்கும் புகுந்து வீரத்துடன் விளையாடும் வீரன் அல்லவா? குமரப்பா என்றால் குடல் கலங்குமே? இவர்களைக குறிவைக்க இதுவா? நீ போட்ட ஒப்பந்தவரிகள். அவர்களுடன் அந்தப் பன்னிருவரைப் பறித்ததனால் போராட்டப்பாதையை மாற்ற முடிந்ததா? சங்கத்தமிழும் தமிழீழ மண்ணும் தங்கள் இருவழிகள் என இலட்சியப் பற்றைக் காட்டினார்களே இன்னுமா புரியவில்லை.

வரலாறு உள்ளவரை இதனை வாய்விட்டுச் சொலலுவதறகாகவே வல்வையில் ஓங்கி உயர்ந்ததுதான் தீருவில் நினைவுத் தூபி. காலம் உருண்டோடியது. வரலாறு வாசலைத்தட்டியது. பதினைந்து ஆண்டுகள் கழிந்து வந்த நினைவு நாள். அன்று 05.10.2002 என்மனம் அதிகாலையிலேயே அவசரப்படுத்திக் கொண்டிருந்தது. வங்கி அலுவல்கள் எவ்வாறு சீக்கிரமே நிறைவு பெற்றதை யான் அறியேன். பதிலொன்றே ஒன்றுதான். ஆவல் ஆம், எமது வீட்டின் அருகே நடக்கும் நிகழ்வுக்காக ஆவல் கொண்டது ஆச்சரியமென்ன? அதுவும் அந்த விலை மதிக்க முடியாத வீர புரு'ர்களுக்காக தூபி அமைந்துள்ள எல்லையே எங்கள் வீட்டு மதில்தானே. நானும் எனது மனைவியும் எனது வீட்டுச் சென்றடைந்தபோது மாலை ஏழ மணியாகியது. புலிகளின் ஏற்பாட்டில் நடந்த அந்த நிகழ்வில் அப்போது வல்வை... வல்வை... வல்வை... மண்... மண்... மண்... மீண்டும்... மீண்டும்... மீண்டும்... எழும்... என எதிரொலி.

கூட்டத்தில் நானிருந்தேன். கூடவே வந்த ஆவலைத் துறந்தேன். கூடியிருந்தோரை மறந்தேன். அந்த நாள் என் நினைவுத் திரையில் நிழல் படமாக ஓடியது. 1987இல் இந்திய இராணுவம் இலங்கை வந்ததும் அமைதிப்புறா ஒன்று அதன் சிறகை ஒடித்ததும் முடிந்த கதையல்லவோ. தீருவில் நினைவுத்தூபி அதனால் உருவாகியதன்றோ. பொதுமக்கள் பலர் தம் காணிகளைப் பகிர்ந்தளிக்க விஸ்தீரமான அந்த வடிவம் பெற்று ஓடிக்கொண்டிருந்தது.

பின்னாளில் போராளிகளின் ஒன்று கூடல் நிகழ்வுகளுக்குரிய இடமாகிய கூடல் நிகழ்வுகளுக்குரிய இடமாகிய அதன் சுற்றுப்புறச் சூழலில் அமைக்கப்பட்ட பூங்கா சுற்றுலா மையமானது. அந்தப் புனிதமான இடம் பொழுதுபோக்கிற்காகக் கட்டப்பட்டதல்ல. காதலுக்காக எழுந்த தாஜ்மஹாலுமல்ல. இதனையியாதோர் ஏதோ சுடுகாடு எனும் போதெல்லாம் என்னைச் சல்லடை போட்டுத்துழைப்பதுபோல் இதயம் குமுறிடும் வேளையில் அனலிடைமெழுகாவேன்.

இங்கு தானே... அந்தத் தியாகச் செம்மல்கள்... தலைவன் காட்டி வழியில் நின்றவர்கள்... தமிழீழமே எங்கள் மூச்சு என்று கட்டுண்டவர் வெற்றுடல்கள் காற்றுடன் சங்கமாகிய போது கரைபுரண்டோடியது கண்ணீர் வெள்ளம். தமிழர் சாதனைக்கு வரையறைபோட்டு வரம்புகட்ட முடியுமா? ஒரு முறைதான் வாழ்வு என்று உலகம் அறியும். ஆனால், ஈழத்தமிழன் என்றால் அந்த முடிவிலும்

உலகின் கண்களை உயர்த்த வைப்பான். கருவறையே கல்லறையானாலும் காவியம் படைப்பான்.

அதனால் உயர்ந்தது தான் தீருவில்தூபி. மக்கள் மனங்கள் இணைந்தன. வல்லுனர்கள் திரண்டார்கள். செய்வதைச் செய்வனே செய்யும் மேசையும் செல்வேந்திரா நெறிப்படுத்தினார். பொறியியல் வல்லுனர் இராஜேந்திரன் தலைமையில் வடிவமைத்து. 1938ல் அமெரிக்கா சென்ற அன்னபூரணிக்கப்பலிக் பாய்மரக்கப்பலை அன்பொட நினைவு கூர்ந்தார்கள். அன்று தமிழன் வரலாறு படைத்தான் கடலிலே. ஆனால், இன்றோ அதே வழிவந்தவர்கள் கடலுக்குள் செல்வதற்குத் தடைவிதிப்பா? காற்றுக்கும் வேலிபோடுவார்கள். நேற்றுவரை தமிழன் எத்தனை தடைதாண்டிவிட்டான் இலங்கை இராணுவம் ஓய்வெடுக்க ஏற்படுத்திய ஒப்பந்தமா இலங்கை - இந்திய ஒப்பந்தம். 1987ல் அமைதிப்படை என்ற அபெயரில் ஆக்கிரமிப்பு படையொன்று காலடி எடுத்து வைத்தது.

மகாத்தமாகாந்தி சிலைக்கு முன்னாலே மனிதர் உயிர்கள் பறிக்கப்பட்டன. எந்த நாட்டிலுமில்லா கொடூரம். வைத்தியாசாலைக்குள்ளேயே மனிதர்கள் உயிர்கள் பறிக்கப்பட்டன. காட்டுமிராண்டித்தனம் அரங்கேறியது. அப்பாவி மனித உயிர்கள் அநியாமாக பறிக்கப்பட்டன.

அவர்களுக்காக அந்த இனத்திற்காகப் பசியை மறந்தவர், வீட்டை மறந்தவர் வீர முழக்கமிட்டு சாதனை படைத்தவர் சரித்திரத்தை முடிக்கலாமென்று தப்புக்கணக்கு போட்டுவந்த அமைதிப்படை அமைதி கொள்ளும் படையாகினர்.

கடலிலே சென்ற எம் வீரப்புதல்வர்கள் பன்னிருவரை கைதியாக்கினர். கைகளில் ஆயும் இல்லை ஆனாலும் அவர்கள் கைகளுக்கு விலங்கிட்டனர். தலைவர் கொழும்புக்கு அனுப்ப முயற்சித்தவேளை தடுத்துக் கூறினார். அனுப்ப வெண்டாம் என்றும், எங்களுக்கு என்ன நடக்கும் என்பதை நாம் அறிவோம் என்று எடுத்துக்கூறினர். கேட்டார்களா? நாடகத்தை நடத்திப் பார்க்கலாம் என்று நடவடிக்கையில் இறங்கினார். எண்ணம் - சொல் - செயல் மூன்றும் ஒன்றாகவே வாழும் வீரமறவர்கள் அல்லவா “சயனைட்” அருந்தினர். இந்தியாவையே சம்மட்டி, சாட்டையால் அடித்தனர். பன்னிருவம் தம் உயிரை மாயத்தனர். அவர்களுக்காக ஓங்கி உயர்ந்து நின்றது “தீரவில் நினவுத்தூபி”.

1988இல் அமைக்கப்பட்டு அதன் முதலாவது நினைவஞ்சலி அனுசரிக்கப்பட்டது. ஒக்ரோபர் 5 என்றால் எல்லாத்திக்கிலும் இருந்து திரண்டுவரும் பொராளிகளை அங்கு காணலாம். இதயத்தைத்தொடும் அந்தநிகழ்வே எல்லோரையும் ஈர்த்தது. மக்கள் திரண்டிடும் அந்நாள் வல்வை முத்து மாரியம்மன் கோயில் இந்திரவிழாவை எமக்கு நினைவூட்டியது. காலையில் வந்தவர்கூட மாலை வருவதை மறந்தனர்.

வண்ணத் தமிழ் காவலருக்கு வடிவமைத்த எழுச்சி சிலை அங்கு தூபியுடன் திரு.ரமணி அவர்களால் வடிவமைக்கப்பட்டு ஆண் - பெண் போராளிகள் இணைந்து வெற்றிக் கொடியாம். புலிக்கொடியை ஏற்றுவதற்கு சமரிலே “சயனைட்” கடித்து வீரமரணம் அடைந்த சகபோராளி ஒருவரை கைகளில் தாங்கும் போராளியை அந்த எழிச்சிச்சிலை தன்னத்தே கொண்டு வீரகாவியத்தை எல்லோருக்கும் எடுத்துக்கூறி நினைவூட்டுவதாக அமைந்தது.

யாழ். குடாநாட்டையே ஒரு குறிப்பிட்ட காலம் வரை தன் கட்டுப்பாட்டில், கட்டுக்கோப்பான வாழ்க்கை முறையுடன் வைத்திருந்து கோணல் கிட்டுவினதும் அவர்களுடன் கடலில் காவியமான சகபோராளிகளதும் ஞாபகார்த்த நிலையும் அவர்ள மரணித்த “எம்.வி.அகத்” (யு.ஏ.யுாயன) கப்பலின் முன் அணியம் அங்குள்ள குளத்தில் நங்கூரம் இட்ட வடிவிலும் எல்லோருக்கும் நினைவுட்டுவதாக அமைந்தது.

பல வீரகாவியம் ஒன்றாக நினைவுபடுத்தப்பட்டு குமரப்பா, புலேந்திரன் போன்ற பன்னிருவருக்காவும் வடிவமைக்கப்பட்ட நினைவுத்தூபி இந்தியா, இலங்கை தமிழர் மீது காட்டிய கயமைத்தனத்தை உரத்துக்கூறுவதற்காக உயர்ந்து நின்றது. அங்கு அமைக்கப்பட்ட பூங்கா அந்த வீரமறவர்களுக்கு மலரஞ்சலி நிரந்தரமாகவே செலுத்துவது போல் அமைக்கப்பட்டது. வீதியும் மாவீரர் வீதியென உரத்துக்கூறிக் கொண்டது. வரலாறு படைத்தவர் இல்லத்துக்கு வழிவிட்டு நின்றது.

காலதேவன் கைவிரித்தான் ஞாலத்தில் நமக்கோர் இடம் வேண்டும் என்று தானே கோட்டோம்.

அந்த இடத்தையே ஆக்கிரமித்தது சிங்கள அரசு. வரலாறு கண்ணிரத யாழ் குடாநாட்டு மக்களின் ஒட்டுமொத்த இடப்பெயர்வும் அதனைத் தொடர்ந்து 1996 மே மாதம் ஸ்ரீ லங்கா இராணுவம் வடமராட்சியில் காலடி எடுத்து வைத்தது அப்போது எமது குடும்பம் தற்காலிகமாகக் கரவெட்டியில் வாழ்ந்து வந்தபோதும் நாம் பிறந்து தவழ்ந்து விளையாடி மண்ணாம் வல்வெட்டித்துறைக்கு போய் வருவதுண்டு.

வல்வெட்டித்துறைக்கு சென்று வரும் நாளில்த்தான் எனது பன்னிரண்டு வயது மகனுடன் ஒரு நாள் எமது வீட்டை நெருங்கிய பொது எமது இராணுவத்தால் ஆக்கிரமிக்கபட்டிருந்தது.

அங்குள்ள இராணுவத்துடன் சிங்களத்தில உரையாடிய போது கப்டன் தரத்தில் உள்ள (கருணரட்ணா என நினைக்கிறேன்) ஒரு அதிகாரி என்னிடத்தில் முன்வந்து தன்னை அறிமுகம் செய்ததுடன் "உங்கள் வீட்டை எந்தவித சேதமுமின்றி வைத்திருக்கிறோம், உள்ளெ வந்து பாருங்கள்". எனக் கூறி அழைத்து சென்றார்.

"அந்த வீடு இரந்த கோலத்தையே வீட்டின் சுவர்களும் சுற்று மதில்களும் பாரிய துவாரங்க்ள பொடப்பட்டு காவல் அரண்ணாகக் காட்சியளித்தமையோ நான் இங்கு கூற வரவில்லை அதன் பின்பு நடந்த சோக நிழ்வையும் வக்கிரச் செயலையும் தான் இங்கு மனங் குமுற நினைவு கூற விளைகிறேன்.

மிகவும் நாகரீகமாகவும் பவ்வியமாகவும் கதைத்த அந்த கப்டன் சிறிது நெரத்தில் என் மகனைமுய் அழைத்துக்கொண்டு எமது வீட்டின் முன்னால் அமைந்துள்ள மைத்துனியின் வீட்டுக்குள் போகும்படி பணித்தார்.

கண்மூடித்திறப்பதற்குள் பாரிய வெடிச்சதம் கேட்டது. நாம் இருந்த கூரைத்தகடுகள் மீது பொல பொல மரபைபோல் கற்சிதறல்கள் வந்து வீழ்ந்ததை உணர்ந்தோம். வீட்டு மதிலால் தூபிப்பக்கம் பார்த்தபோது தூபி 5பாகை அளவில் சரிந்து காணப்பட்டது. மீண்டும் பாரிய சத்தம் வெளியே வந்த என்னை உள்ளே போகுமாறு பணிக்கப்பட்டேன். எமது வீட்டில் இருந்த அதாவது அவர்கள் போட்ட காவலரணிருக்கும் எமது வீட்டில் இரந்து நீளமான மின்காந்த வயர்கள் தூபியின் அடிப்பாகம் வரை நீட்டிச்சென்றதை அவதானிக்க முடிந்தது. மீண்டும் பாரிய சத்தம் அதைத் தொடர்ந்து கற்சிதறல்கள் அப்போது பூஜிக்கப்பட வேண்டிய தூபியை நாம் பார்த்தபோது அது மேலும் வல்வை சிவன் கோவில் பக்கமாக சரிந்து காணப்பட்டது. எல்லாம் வல்ல பரம்பொருளே என்று வணங்குவது போல் நின்றது. இப்போது 15 பாகை அளவில் சரிந்தது. சரித்திரம் படைத்தவர் சரீரம் சங்கமமான இடமல்லவா. தலைசாய் சங்கடப்பட்டது. பொறுமை இழந்தேன் வெளியில் வந்தேன். வீட்டில் வாசலில் நின்ற சிங்களச்சிப்பாய் என்னைத் தடுத்து நிறுத்தினான் என்னை. என் உணர்வுகளை அல்ல வீட:டக்குள் முடக்கப்பட்டேன். மீண்டும் 3, 4 தடவை வெடிச்சத்தம். நீரே மன்னன் பிடில் வாசித்து மகிழ்ந்ததில் தவறில்லை. அத்தனை மகிழ்ச்சியில் ஆர்ப்பரித்தார்கள். உயிருடன் அந்த வீரமறவர் இருந்த காலத்தில ஸ்ரீலங்கா இராணுவத்திற்குச் சிம்ம செப்பனமாக இருந்தவர் சின்னம் வீழ்ந்தது. அந்த நெடிய தூபி சரிந்தது. சிவன் - பார்வதி கோவிலின் பக்கமாக மட்டுமல்ல இந்தியாவையும் நோக்கி அதன் அநீதியை சுட்டிக்காட்டுவதாகவும் சரிந்தது. அந்த மகிழ்ச்சி அடங்க அவர்களுக்கு.

மதிலால் நான் பார்த்த போது அந்தோ தூபியைக் காணவில்லை. என் ஆவேசமும் துடிப்பும் இன்று எழுத்தில் வடிக்க முடியாமல் வருந்துகின்றேன். என்செய்வேன். போர்நெறி தவறிய, சர்வதேச மரபகளை யுத்தத்தில் கடைப்பிடிக்க தெரியாதவர்கள் மகிழ்ந்தார்கள். ஆனால், எனக்குள்ளே ஒரு தீக்குளிப்பே நடந்தது கொண்டிருந்தது. இனவாத அரசு இதற்கு ஒரு முடிவுகாலம் வரும் என்று வாய்விட்டுத் திட்டினேன். வல்லமையற்று வேறு ஒன்றும் செய்ய முடியாமல் தவிர்த்தேன்.

ஒரு சிப்பாயும் வீட்டை நோக்கி ஓடி வந்தார். என்னிடம் மண்வெட்டி அல்லது அலவாங்கு இருக்கிறதா என்று கோட்டான். ம்... அவருக்க உதவி செய்யும் நிலையிலா இருந்தேன். இல்லை என்று கூறினேன் நான் கூறிய விதத்தில் என் மனநிலையை புரிந்து கொண்டானே என்னவோ அவன் விடவில்லை. எமது வீட்டுக்குள் புகுந்து எப்படியோ ஒரு மண்வெட்டிப் பிடியை எடுத்து வந்தான். என்ன செய்யப்பேகிறான் என எண்ணின். இல்லை என்றதற்கு என்னை தாக்குவானோ என நினைத்த நான் இப்படியே அடித்துக் கொன்றான் என்றால் எவ்வளவு உதவியாக இருக்கும் என்றான். இனி நான்

உயிருடன் இருக்க வேண்டமா? மாங்கொட்ட தமிழனாக வாழும் ஒரு வாழ்வா அதுவும் இந்த வல்வை மண்ணில்.

என்னே ஈனச்செய்ல எழச்சிச் சிலையில் இருந்து வெடித்து சிறதறிய ஒரு பெராளியின் சிமென்ரிலான ஒரு மன் கைப்பகுதியை அந்த பிடியால் அடித்து அவை சிறு துண்டுகளாகப் பொகும் வரை தன் வக்கிரத்தை தீர்த்துக்கொண்டான். சிலுவையில் மரித்த கிறிஸ்துபிரானின் உயிரற்ற உடலை ஒரு யூதன் ஈட்டி கொண்டு துளைத்தானே அதுபோல் இருந்தது. நெஞ்சைப்பிளக்கும், குருதியை உறைய வைக்கும் அந்த செயல் உலகில் எந்த மனிதனாலும் மன்னிக்க முடியாதது. சிலைக்கே இந்த நிலை என்றால் இவர்களிடம் போராளிக்ள உயிருடன் அகப்பட்டால் - எண்ணிப்பார்க்க முடியாமல் தவித்தேன். அந்த பன்னருவரும் “சயனைட்” அருந்திய அந்த ஒப்பற்ற நிலையை ஒருமுறை நினைத்த பொது என் ஓர விழிகள் அப்போது கண்ணீர்வடித்து காய்ந்திரந்தது.

வீரகாவியம் படைத்த வல்வை மண்ணிலே சரித்திரச்சின்னங்களாக அமைந்த குமரப்பா, புலேந்திரன் பொன்ற பன்னிருவர் நினைவுத்தூபி, போராளிகளின் எழுச்சிச்சிலை, கேணவில் கிட்டுவினதும், சகபோராளிகளினதும் நினைவுச்சின்னமான கப்பல் அழிக்கப்பட்டு தீருவில் மைதானம் 5.10.2002ல் கொண்டாடப்பட்டு அது வீர முழக்கமிட்ட சூரியமூர்த்தி பேசிய வல்லை மண் மீண்டும் எழும் என்பதில் சந்தேகம் இல்லை. அது தூரத்திலுமில்லை. என்றும் பொய்க்கப்போவதுமில்லை.

மண்ணின் மகிமை அன்னபூரணியுடன் சென்றுவிடவில்லை. ஆக்கிரமிப்பு படைகளால் அழிக்கப்பட்டாலும் அது தன்னகத்தே கொண்டுள்ள தனிச்சிறப்பை தரணி அறியும் நாள் வெகுதூரத்தில் இல்லை. அத்ன பெருமையை நாட்டின் தென்பகுதியினர் உணர்ந்து தான் எம் தலைவர் வீட்டுக்கு அதன் பார்வையிட சென்றர்கள்கூட ஒரு பிடி மண்ணும் எடுத்து செல்கின்றனர்.

எனவே வல்வை மண் மீண்டும் எழும். இதே தீருவில் மைதானத்தில் சரித்திரச்சின்னங்கள் உருவாகும். இதற்கு மானமுள்ள தலைவர் உழைக்க வேண்டும்.

# பேரழிவு செயற்கைச் சுனாமிகள பல கண்ட
# எமக்கு மற்றோர் அழிவைத் தந்த ஆழிப்பேரலை

மனவெளியில் தொடராய் அலைமோதிய வினாவிது. இக்கட்டுரையை எழுதுவதா? விடுவதா? பல தடவைகள் யேசித்த பின் இதை ஆரம்பிக்கின்றேன் ஆற்றுபடுத்தல் 9ஊழரஉெடைலை) என்ற பதம் சமகாலத்தில பத்திரிகைகளில் வரும் ஒருதலைப்பு அதாவது, கொடூரகாட்சிகளை கண்டும் உடன்பிறப்புக்களை கொடிய நிகழ்வுகளில் இழந்தும், பிள்ளைகளை கட்டி அணைத்தபடி உயிர்திறந்த பெற்றோர்களின் நெஞ்சுருகும் நிலைகண்டும்... என்னும் நீண்டு கொண்டு போகும் துன்பத்தின் எல்லைக்குச் சென்றுவிட்ட எம்மக்களை சிறிய கட்டுரை மேலும் அல்லலுறச்செய்யாத என்ற நம்பிக்கையிலேயே இதனை ஆரம்பிக்கின்றேன்.

## இழப்புக்களை அதிகரித்த சுனாமிக்கடல் அனர்த்தம்

சுனாமியின் போது நடந்த நிகழ்வுகள் உயிர்தப்பிய ஒவ்வொருவருக்மக் ஒரு சரித்திரம், வரலாறு, மறுபிறப்பு. இப்பொழுது நாம் தென் இலங்கை முதல் வடஅலங்கை வரை கண்டும், கெட:டும், அனுபவித்து வரும் நிஜயங்கள் போர்ககாள சூழலில் வாழ்ந்தோரும் அதன் கொடுமைகளுக்கும் முனம் கொடுத்தோருக்முக் ஒன்று புதிதில்லை என்பதே இங்கு மனம் கொள்ளப்பட வேண்டியதாகும். உஉண்மையில் போர்க்களா சூழலில் உயிர் உடமைகளை இழந்த மக்களின் இழப்புக்களை அண்மைய நிகழ்வு மேலும் அதிகரித்துள்ளது.

உதாரணத்திற்கு சிறுவர்களுக்கு வெள்ளை என்றால் பால் என்போம். நீலம் என்னால் வானம் என்கின்றோம். இறைவன் என்றால் ஆலயம் என்கின்றொம். இவை அவர்களின் மனங்களில் பதிந்துள்ளது போன்று யுத்தத்தில் தம் இரத்த உறவுகளை துடிக்க துடிக்க இழந்தவர்களுக்கும் சிறுகச் சிறுகச் சேமித்த தம் உடமைகள் கணப்பொழுதில் இடந்தெரியாது போன காட்சிகளை கண்டவர்களுக்கும், அந்த பீதி சமாதான உடன்படிக்கையின் மூன்றாம் ஆண்டிலும் அகலாமல் பசுமரத்தாணிபோல் பதிந்துள்ளது என்பதே நிதர்சனம். இதற்கு குமுதினிப் படுகொலையைச் சொல்லவா? நாகர்கோயில் பாடசாலைமீது குண்டு வீசி பச்சிலம் குழந்தைகளின் உயிர் குடித்ததை செல்லவா வல்வைப்படுகொலையை செல்வதா என நீளும் பட்டியல்...

பிணக்குவியல் வடபகுதிக்கு ஒன்றும் புதிதல்ல தரைமட்டமாக்கப்பட்ட கட்டிடங்கள் ஒன்றும் விசித்திரமல்ல. கடற்றொழிலாளர்களின் படகுகளும், உபகரணங்களும் எரித்து நாசமாக்கப்பட்டவை ஏனையோர் அறியாதல்ல. இருந்த வடுவரை இல்லாது அழித்தொழிக்கப்பட்ட ஆலயங்கள், வீடுகள், கிராமங்கள் வடக்கிற்கு புதிய பதிவேடுகள் அல்ல.

## திட்டமிட்ட பேராளி

ஆளும் வர்க்கத்தினாலும், ஆக்கிரமிப்பு காரர்களாலும் செயற்கையாக வேண்டுமென்றெ திட்டமிட்டு செய்யப்பட வேண்டிய பேரளிவுகளை, வடமராட்சி மக்கள் 1987 ஒபரேசன் லிபரேசன் காலத்திற்கு முன்பிருந்தே அனுபவித்து வருகின்றனர். ஒரு தடவையா.... இரு தடவையா... பல தடவையா.... என எண்ணும் தரமற்ற பல காலகட்டங்களில் செந்தமண்ணை விட்டு வெளியேறி உறவுகளைப் பிரந்து வாழந்நத காலங்க்ள பல இது எம் வாழக்கையில் காலங் காலமான (அன்றாட) நிகழ்வுகள் ஆகிவிட்டன.

இங்கே பெரிய சத்தம் கேட்டுவிட்டால் அங்கே “கிபீர்” வந்துவிட்டது. சகடை குண்டு போடுகிறது. பலாலியில் இரந்து ’ெல் கிளம்பிவிட்டது எனக்கூறித்தான் எம்மக்களிற்குப் பழக்கம்.

கடற்பக்கமாகச் சத்தம் கெட்டால் அதோ “நேவி அடிக்கிறான். கரைக்கு வந்துவிட்டான். ஆமியை இறக்குகிறான்” என்பார்கள் பதற்றத்துடன் கையில் அகப்பட்டதை எடுத்துக்கொண்டு ஓடுவார்கள்.

இது வடபகுதி முதல் முல்லைத்தீவு, திருமலை ஈறாக கரையொரப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் பட்டு அனுபவித்த துயர, துன்பங்கள், அடிமனங்களில் ஆழப்பதிந்த வடுக்கள்.

## எதிர்பாராத பேரழிவு

26.12.2004 இல் ஏற்பட்ட கடற்கோள் சுனாமியினால் இழப்புக்கள் பல மடங்காகின. வல்வை ஆதிகோவிலடியிலிருந்து முல்லை மாவட்டம்வரை நேரடியாகப் பாதிக்கப்பட்ட சகல மக்களினதும் கலந்துரையாடலின் ஊடாகவும், அவர்கள் கூறிய கதைகளிலிருந்து கீழ்வருவனவற்றை நாம் அறியமுடிகின்றது.

❖ “கடற்பக்கத்திலிருந்து பாரிய வெடிச்சத்தங்கள் கேட்டதும் கடல் சண்டை நடக்குது. இனிக் கரைக்கும் ெல் அடிப்பாகங்கள். பொம்பரும் வரும். எல்லாரும் விழுந்துபடுங்கோ. இவ்வாறு கடற்கரையில் படுத்து கடலால் காவு கொள்ளப்பட்டோர். பலர்”.

“பாரிய சத்தம் கேட்டமையால் பிள்ளைகளைக் கொண்டு ஓடமுடியாத பெற்றோர் கதவுகளை இறுகப்பூட்டி வீட்டினுள் இரந்து உயிர் பிரிந்தோர் சிலர்.”

“பரவலாகக் கேட்ட சத்தத்தினால் ஆமி புகுந்துவிட்டான் என எண்ணி கடற்பக்கம் ஓடிச்சென்று பலியானோர் பலர்”.

மணற்காடு போன்ற பிரதேசங்களில் அமைக்கப்பட்டிருந்த இராணுவத்தின் முட்கம்பிவேலியினால் அக்காவலரணுக்குள் சிக்குண்டு தம்மை மீட்டுக்கொள்ள முடியாது இறந்தவர்கள் ஏராளம். இதில் தம் கூந்தல் சிக்குண்டு மீளமுடியாது இறந்த பெண்கள் ஏராளம்”.

தேசியத் தலைவர் 17.01.2005இல் புத்தி ஜீவிகளுடனான ஆலோசனைக் கூட்டத்தில் கூறியதுபோல, கடந்த காலத்தில் சிறிலங்கா அரச படைகளின் நடவடிக்கைகளால் எமது மக்கள் சொந்தங்களையும், சொத்துக்களையும் இழந்தும் இடம்பெயர்ந்தும் விசேடமாக சில கிராமங்களே தரைமட்டமாக்கப்பட்டமை (உதாரணமாக 1987இல் வல்வை ஆதிகோயிலடிக் கிராமம் தரைமட்டமாக்கப்பட்டமை) இப் போதைய இயற்கை அனர்த்தத்தைவிட மோசமானது. இவை யாவும் ஏனைய நாடுகளோ அன்றி தென்னிலங்கை மக்களோஅறியாமல் மூடிமறைக்கப்பட்டன.

நமது நாட்டைப் பொறுத்தவரை வடபகுதி சிறியதும் பெரியதும் பல செயற்கைச் சுனாமிகளைக் கண்டுள்ளது. இவற்றிற்கொல்லாம் முகம் கொடுத்து பழக்கப்பட்டு மீண்டும் இயல்பு வாழ்வினை அரச இயந்திரங்களின் துணையன்றி ஆரம்பிக்க அந்த இயந்திரங்களின் துணையின்றி ஆரம்பிக்க அந்த வல்லமையை எமக்கத் தந்த அரசிற்கு நாம் ஒரு வகையில் நன்றிக் கடன்பட்டவர்களே.

தற்பொழுது தமிழ் மக்களிடம் எழும் சந்தேகமும் கேள்வியும், இனிவரும் காலங்களில் நாம் சிறிலங்கா அரசின் நிவாரணங்களையும் புதிய கட்டுமானப் பணிகளையும் நம்பியிருக்காது நம்மை நாமே புலம்பெயர்ந்த எமது உறவுகளின் உதவியுடன் மீளக்கட்டியெழுப்ப ஆயத்தமாக வேண்டுமா? அன்றி சிறிலங்கா அரசை நம்பி மோசம் போவதா? என்பதே.

## ஆரோக்கியமான அறிகுறி

உதவி வழங்கும் பணக்கார நாடுகள் தமது “சுனாமி” உதவிகளைத் தமிழ் பேசும் மக்களிற்கும் உரிய விகிதத்தில் சென்றடைய வேண்டுமென சிறிலங்கா அரசுக்கு நிபந்தங்களையும் நிபந்தனைளையும் வேண்டுகோளாக்கிக் கொண்டிருக்கின்றன எனப் பத்திரிகைகள் வாயிலாக அறிகின்றோம். இது ஓர் ஆரோக்கியமான அறிகுறி. பின்னணி எதுவாக இருந்தாலும் போர்க்கால அனர்த்தங்களுக்கு நடந்த இருட்டிப்புப் போலல்லாது, உலகலாவிய ரீதியில் ஒரு கண்காணிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆண்டாண்டு காலமாகப் பேரினவாத அரசுகளுடன் பல உடன்படிக்கைகளைச் செய்வதும் பின் அவை செயலிழப்பதும் சர்வசாதாரணமான நிகழ்வுகளே “நம்பநட நம்பிநடவாதே” என்பது முதுமொழி எனவே, நாம் பட்டறிந்த அனுபவங்கள் மூலம் இத்தடவையும் சிறிலங்கா அரசு எம்மை ஏமாற்றாமல் கண்காணிப்பது மனங்கொள்ளப்பட வேண்டும். ஏனெனில், சிறிலங்கா அரசு வழமைபொல அரைகுறை நிவாரணங்களை வழங்கிவிட்டு நீண்டதொர பட்டியலை உலகிற்குக காட்டவும் முனையலாம்.

எது எவ்வாறாயினும் விடுதலைப் புலிகளுடன் ஏற்பட்டுள்ள "சுனாமி நிவாரணத்திற்கான உத்தேசக் கட்டமைப்பு" தமிழ் பேசும் மக்களின் திருப்திக்கு ஏற்ப நடைமுறைப்படுத்தப்படுமாயின் அது சிறிலங்கா அரசின் மீதான தமிழ் மக்களின் நம்பிக்கையில் மீண்டும் ஓர் ஒளிக்கீற்றாகவும் அமையலாம். இதுவே நாட்டின் புரையோடிப்போன இனப்பிரச்சினையின் தீர்வுக்கான அடித்தளமாகவும் ஆகலாம். இது ஆகவேண்டுமென மீண்டுமொரு நமபிக்கையுடன் எதிர்பார்ப்போமாக.

உலகையே தன் கைக்குள் அடக்கிவிட்ட விந்தைகயைக் கண்ட மனிதனுக்கு. இயற்கை கடந்த ஆண்டின் இறுதி நாட்களில் கதிகலங்க அடிகொடுத்து முடிந்துவிட்ட அந்தபேரழிவு நிகழ்வு நிகழ்வு வரலாற்றுப் பதிவுகளில் பதிந்து கொண்டிருக்கும் நேரமிது. இழப்புக்கள் எண்ணப்பட்டு, அளப்பரிய வேதனைகளுக்கு ஒத்தடம் கொடுக்கும் தருணமிது. இந்துவேளையில் நாம் நமது நினைவலைகளை சற்று முன்னோக்கி நகர்த்து வோமாயின், ஈழத்து வடக்கு கிழக்கு தமிழர்களின் தூங்காத எத்தனையோ இரவுகளையும், துடைக்க முடியா கண்ணீர் கதைகள் ஆயிரமயிரம் இருப்பதையும், மறக்க முடியாஅந்த வேதனைகளைச் சுமந்து நிற்கும் நமது உறவுகளையும் காணலாம்.

அத்தனை நினைவின் நிகழ்வுகளையும் இன்று நிறுத்தி வைக்க நிச்சயமாய் ஆவணங்கள் உண்டு. கணத்தின் துளி அசைவுக்குள்ளே அழித்தொழித்த சொத்துக்கள் தான் எத்தனை? பறித்தெடுத்த உயிர்த்தொகை தான் எத்தனை? உறக்கத்தில் இருந்தவர்களை, நோய் கண்டு வைத்தியாசலைகளில் கல்வி பயின்று கொண்டிருந்த பள்ளிச்சிறார்களை, கடற்தொழிலுக்கென ஆழ்கடல் செல்கையில் கடலோடு மூழ்கடித்த உறவுகளின் காணாமல் போன தொகைகளை, வியாபாரநோக்கோடு லொறியில் சென்ற சாரதி - கிளினர்களை வீதித் தடை போட்டு அவர்களை அழைத்துச்சென்று வெற்றுடல்கள் வீடு திரும்பாமலே அழித்தொழிக்கப்பட்ட கதைகளை, அடையாள அட்டையென மனிதனுக்கு குறிகட்டு, அது தொலைந்தால் உயிர் அல்லது. யானையின் சென்று தீர்ப்பொழுத வீடு பிரித்து வீதி சமைத்த விநதையான பழைய கதைக்கு உயிர் கொடுத்த பரம்பரை வழிவந்தானா? தனி ஒரு இராணுவத் தலைவனின் தலைவலி தீர, ஆதிகோவிலடி வல்வெட்டித்துறையில ஈரந்து பருத்தித்துறை தெரியவேண்டும் என்பதற்காக அழித்திடித்த அத்தனை தமிழனின் வீடுகளும் சொத்துடைமைகளும் சாட்சி சொல்லும். அத்தனைக்கும் ஆவணச்சான்றுண்டு.

தமிழுக்கு அழகுதந்த வள்ளுவனுக்கும், பாட்டினால் பரவசமூட்டிய பாரதிக்கும், பெண்புலவர் ஔவைக்கும் சிலை வடித்து வைத்த அழகினையே அடித்து நொறுக்கய இராணுவ வ்லாதிக்கத்துக்கு, உயிருடன் வாழ்ந்த தமிழன் சிம்ம சொப்பனமாக இருந்தமையால் அவனது வீடுகள் இடிக்கப்பட்டன. இல்லை, அவனது காவல் அரணுக்கு கவசமானதும் தமிழன் வீடுதான். எரிப்பதற்கு விறகில்லை என்றால் வீட்ஏன் கூரையைப் பிரிக்கலாமா? தனக்குப் பாதுகாப்பில்லையென்று தகர்த்த வீடு, தமிழன் வீடுதான். கேட்கயாருமற்ற நினைப்பில் தயவு தாட்சணியம் பாராது செய்த கொடுமையால், திருத்தி இருக்க திராணியற்ற தமிழன் திககொல்லாம் பெற்ற பெயர் அகதி வாழ்வு.

இத்தனைக்கும் மத்தியில் குப்பி விள்கொடுத்து தப்பில்லா படிப்பு முடித்து தரணியிலே பட்டம் பெற்று தாய் மண்ணில் சேவை செய்யமுடியாபரிதவிப்பு. தம்பி, தங்கையோடு கூடி வாழ முடியா அவல வாழ்வு.

காலையிலே கிபிர் குரல் கொடுத்து துயில் எழுப்பும். சுப்ரபாதம் கேட்டெழும்ப மின்சாரம் தடைவிதிப்பு, பால்மா இன்றி பச்சிளம் குழந்தை வாகனங்கள் இன்று எமக்கு அதிசயத்தைத் தரவில்லை. வைத்தியாசலையில் கடமை புரிந்திடும் வைரநெஞ்சங்கள் வாடி நொந்திடவில்லை. பரீட்சயத்தில் பக்குவப்பட்ட ஆத்மாக்கள் தான் தமிழர்கள். உலகுக்கு அழிவின் பாடம் புதிது. ஆனால், தமிழனுக்கோ அழிவின் பாடம் பழையது. அவனுக்கு தைரியமே அதுதான்.

உலகின் மமதையை ஒரு கணம் உலுப்பிவிட்ட அந்த ஆழிப்பெரலை தனக்கு எனபெயரையும் தத்தெடுத்தது "சுனாமி" என்று. அது, உலகின் பொதுமொழிச் சொலலாக வரலாற்று வரிகளில் இன்று தடம் பதித்து நிற்கின்றது. ஜப்பான் நாட்டுக் கடற்கரையில் தவழ்ந்து விளையாடிய சொல், இன்று உலகின் மூலை முடுக்கெல்லாம் விஸ்வரூபமெடுத்து மனிதநேயத்தின் முன் மகத்தான சக்திப்பிரளமா காட்சியளிக்கின்றது. காற்றோடு கலந்தவிட்ட மணம்போல், உலகின் காழமிடத்தையெல்லாம் சுவீகரித்து,

கலியுகத்தின் இன்றைய நாட்களில் இன்னொரு சக்தியாக இடம் பிடித்து விட்டது இச் சுனாமி.

இந்துமா கடலில் எங்கோ 9.0ரிச்டரில் பூமிக்குள் ஒரு உலுப்பல். அதிலே உருவான சுனாமியெ, இனம் பார்த்தாயா? மொழி பார்த்தாயா? மதம் பார்த்தாயா? ஏழை பணக்காரன் பார்த்தாயா? இல்லை நாடுதான் பார்த்தாயா? உண்மையில் நீயன்றோ சமநாகர் கொவிலிலும். புதிதாக என்னசேதி கொண்டு வந்தாய்? வயது பேதமின்றி வதைத்துத் துவைத்து அவர்கள் கதைமுடித்தாயே. அதனையும்நாம் கண்டோம் - வல்வைப் படுகொலையிலும் யாழ். வைத்தியசாலையிலும்.

உனக்கொரு விடயம் தெரியுமா? பொம்பர் ஒலியுடன் வரும் யுத்த அரக்கனையே எதர்கொண்டு பழக்கப்பட்டவர் எம் மக்கள். மீண்டும் அவன் வந்து விட்டானோ என்னவோ என்ற உணர்வில் நீ வருகையில் பலர் ஏமாந்து போனார்கள் அதற்கேற்ப நிலத்தில் வீழ்ந்தும் வீட்டினுள் மறைவிடம் தேடியும் நின்றார். ஆனால், நீயோ அதே ஒலி எழுப்பிய வண்ணம் வேறு உருவில் வருவாயென யார் நினைத்தார்கள். உன்கோலம் முன்பே தெரிந்திருந்தால் அப்படிச் செய்திருக்க மாட்டார்கள். இத்தனையளவு உயிர்கள் உன் பிடியில் அகப்பட்டிருக்க மாட்டார்கள். ஆமிதான் திடீர் தாக்குதல் என்றால் நீயுமா சுனாமி? இது வடக்கு - கிழக்கில் மட்டும்தான். தென்னிலங்கைக்குத் தெரியாதென்று. மேலும், ஓடும் புகை வண்டியை தென்னிலங்கையில் தடுத்து நிறுத்தி ஆட்டம் காட்டினாய். அதெல்லாம் நாம் முன்பே கண்ட காட்சி என்பதை ஏன் அறிய மறந்தாய். புதிதாக நீயெதனைக் கொண்டுவந்தாய்?

சுனாமியே நீ ஒரு மாதக்குழந்தை மீண்டும் வருவாயா நாம் அறியோம். இலங்கையரசு போல் நீயும் வருத்தமாடடாய். ஒருமாதக் குழந்தைதானே, சாணக்கிய அறிவு தலையை நிரப்பியிராது.

சுனாமியே, என்ன கொடுர இதயம் உனக்கு இறந்தவர்களைப் புதைப்பதற்குக் கூட அவகாசம் கொடக்காது அவர்கள் வெற்றடல் உக்கிநிற்க வைத்தாயெ.

இந்தக் காட்சிகள் எல்லாம் ஏற்கனவே நாம் கண்டதால் இப்பொது நீ தந்த கொடமைகளையும் தாங்கி நிற்கின்றோம். வேற்று நாட்ட இராணுவம் வருவதற்குள் கல்லறைகளை நாமே தோண்டிவிட்டோம்.

“ கெட்டவன் கெட்டில் கிட்டிடும் இராஜதுரோகம் ” என்பது சோதிட மரபு. இது யாருக்கும் பொருந்தா விடினும் இலங்கையரசுக்கு எழுதிவைத்த உயிர்த்துடிப்புள்ள வரிகள் சுனாமியால் அடித்துச்சென்ற கற்களில் கரையொதுங்கிய கல்வெட்டில் சுமந்த கீதத்தக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டேன் என்று அதையும் நினைவு படத்தாதே. தாலாட்டுப்பாடி தலைசாய்க்க நேரமில்லை என்று பால்கொடுத்த நெஞ்சங்களும் பரிதவித்த கதைகளும் ஏராளம். வெள்ளை நிறமென்றால் காலைமட்டும் காட்டுவோம் என்று நினைத்தா எமது தாய்மார் பலருக்கு வெண்ணி நிற ஆடைகளை அணியவைத்தாய். அந்தக் காட்சிகளை சாட்சியாக்கி ஆட்சியமைத்தவருக்கே, அது சலித்த கதையென நீயறிய மறுத்ததேன்?

எத்தனை வாகனங்களை உருட்டிச்சென்றாய் . உலகு அதனைப் படம் பிடித்த அற்புதகாட்சிகளை தினம் தினம் பார்த்திருப்பாய். அதுபோல் எத்தனை எரிந்து கருகியது. எமக்கு பழைய பாடங்கள்.

எங்கள் உறவுகளின் அழகிய முகங்களில் சேற்றை வாரிச் சுருட்டி உன்னடைய நீல நிறத்தை கரிய நிறமாக்கி பூசி அசிங்கமாக்கினாயெ. அது கூட பீப்பாய் பீப்பாயாய் கொட்டிபார்த்தார்கள் பலனளிக்கவில்லை என்பதும் படித்து முடித்த கதை. மொத்தத்தில் தாய்மைக்கு உலகமே மதிப்பளிக்கும் தன்மையை படம் பிடித்துக்காட்டவா பல தாய்மார்கள் தமது குருத்துக்களை அணைத்தலாறு மரணத்தை அரவணைத்ததை படம்போட்டு காட்டவைத்தாய். இல்லை ஒன்றை உனக்கு நினைவுட்டவே அவர்கள்

அப்படிச்செய்தார்கள் ஏனெனில் சுனாமியால் அநாதையாக்கப்பட்ட குருத்தக்களின் கண்ணீர் வரிகளுக்குள் தமது செல்வங்களின் கதைகளும் அடங்கிவிடக்கூடாது என்பதற்காகவே அவர்களோடு வந்த தொப்புள் உறவினைத் தப்பவிடவில்லை. அந்த மரணத்திலும் மதி மயங்கா மணிக்கத்தெய்வங்கள் அவர்களுக்கு சிலை எடுத்தால் திரும்பி நீவரவாய்.சீரழித்த அவர் கதை முடிப்பாய். வெட்கத்தால் வேறு என்னதான் செய்ய முடியும்.

ஒருசோறு பதமாகலாம், தெரியாமல் இல்லை தூய மனதின் செயற்பாடாயின் விட்டவிடலாம் வேடம் போட்டு ஒரு குடம் பாலை துளிவிடம் போட்டுக்கெடுக்கையில் பார்த்தக்கொண்டு இரக்க முடியுமா? சட்டம் போட்டத் தடுக்க முடியாத பதவியில் இருக்கும் தைரியம் கைலாகு கொடுத்து புகைப்படம் பிடித்து ஊடகங்களைத் துணைக்களைத்து ஆடும் நாடகம் தான் ஏன்? ஆதிகோவிலடி ( வல்வெட்டித்தறை) முதல் முல்லைத்தீவு வரை மக்கள் மனதினை படம்பிடித்து அவர்கள் நெஞ்சினில் இடம்பிடித்தால் ஊடகமும் தேவையில்லை. அவர்கள் அதனைக் கோவிலாக்கி, மணியோசை எழுப்பி உலகையே அசைத்து விடுவார்கள். அந்தச் செய்தியை சொல்ல ஆயிரம் அன்னபூரணிகளை (வல்வையில் இருந்து அமெரிக்கா சென்ற பாய்மரக் கப்பல் ) கட்டியெழுப்பி உலகின் நாலாபுறமும் அனுப்பி விடுவார்கள்.

காலம் போவதற்குள் கட்டுமானங்கள் தொடரக்கைகொடுக்கும். கரங்களைப்பற்றிக்கொள்ள 17. 01.2005 இல் நமது தேசியத்தலைவரால் கூட்டப்பட்ட புத்திஜீவிகளின் கூட்டமே அத்திபாரமிட்ட நாளாகும். அதுவே உலகின் உறக்கத்தைத் தட்டி எழுப்பி நிற்கும் நாளாக உருவெடுக்கும். உலகின் கண்களை எத்தனை நாட்களுக்கு பார்க்க முடியாது தடுத்து வைக்க முடியும். ஒரு நாள் வெளிச்சம் போட்டுக்காட்ட முடியாமலா போகும்.

எதிரி வீட்டிலும் இனிய உணவு புசிக்க வேண்டும் என்ற இதயம் படைத்தவர்கள் நாம். காலம் காலமாய் அரசு இத்தனை செய்த போதும் அன்புப்பாலம் அமைத்தவர்கள் நாம். அமைதிவழியை தேடிக்கொண்டிருப்பவர்கள் நாம். இங்கே உறவுகள் இப்படி இருக்க தேடி ஓடலாமா இராணுவ பலத்தை சமப்படுத்த முடியா முயற்சிக்கு முந்தானை கட்டலாமா.

போரா , சமாதானமா, என்ற வார்த்தை எதற்க்காக? இரண்டு சொற்களில் ஒன்று முடிந்து போனது முடிந்ததாகவே அமையட்டும். மலர்ந்த புத்தாண்டு புது யுகம் படைக்கட்டும். கடந்த ஆண்டு அழிவுக்கு முடிவுரை எழுதியதாகவே இருக்கட்டும். ஒற்றுமையைக் கட்டியெழுப்ப அழிவின் சாம்பல் மேடு அத்திபாரமாகட்டும் கிழக்கின் உதய சூரியனின் சமாதான ஒளிவீச்சு மேற்கின் கரைகளில் கீதம்பாடும். அந்த இசைகேட்டு புவி அசைந்தாடட்டும். அந்த ஒலிக்குள் தமிழும் சிங்களமும் சமரசமாகட்டும். உலகைக் கலக்கிய சுனாமியே இதற்கு உறுதுணை புரிந்து உன்வருகையும் இறுதியாகட்டும்.

# சுனாமியே சமர்ப்பணம்

உலகையே தன் கைக்குள் அடக்கிவிட்ட விந்தையைக் கண்ட மனிதனுக்கு இயற்கை கடந்த ஆண்டின் இறுதி நாட்களில் கதிகலங்க அடிகொடுத்து முடித்துவிட்ட அந்தப் பேரழிவு நிகழ்ந்த வரலாற்றுப் பதிவுகளில் பதிந்துகொண்டிருக்கும் நேரமிது. இழப்புக்கள் எண்ணப்பட்டு அளப்பரிய வேதனைக்கு ஒத்தடம் கொடுக்கும் தருணம் இது. இதேவேளையில் நாம் நமது நினைவலைகளைச் சற்று முன்னோக்கி நகர்த்துவோமாயின் ஈழத்தின் வடக்கு கிழக்கில் தமிழர்களின் தூங்காத எத்தனையோ இரவுகளையும் துடைக்கமுடியாக் கண்ணீர்க் கதைகள் ஆயிரமாயிரம் இருப்பதையும் மறக்கமுடியா அந்த வேதனைகளைச் சுமந்து நிற்கும் நமது உறவுகளையும் காணலாம்.

அத்தனை நினைவின் நிகழ்வுகளையும் இன்று நிறுத்திவைக்க நிச்சயமாய் ஆவணம் உண்டு. அவற்றின் துளி அசைவுக்குள்ளே அழித்தொழித்த சொத்துக்கள் தான் எத்தனை? பறித்தெடுதத உயிர்த் தொகைதான் எத்தனை? உறக்கத்தில் இருந்தவர்களை, நோய்கண்டு வைத்தியாசாலைகளில் இருந்த நோயாளர்களை, பாடசாலைகளில் கல்வி பயின்றுகொண்டிருந்தவர்களை, கடற்றொழிலுக்கென ஆழ்கடல் செல்கையில் கடலோடு மூழ்கடித்த உறவுகளின் காணாமற் போன தொகைகளை, வியாபார நோக்கோடு லொறியில் சென்ற சாரதி, கிளினர்களை வீதித்தடை போட்டு அவர்களை அழைத்துச் சென்று வெற்றுடல் வீடு திரும்பாமலே அழித்தொழித்த கதைகளை , அடையாள அட்டையென மனிதனுக்கு குறிசுட்டு அதுதொலைத்தால் உயிர் எடுத்த இராணுவ நியாயங்களை, ஆலய மணியடித்து ஆண்டவனை வழிபடத்தடைவிதித்து எரிக்கப்பட்ட ஆலயங்களை அத்தனை உயிர்களுக்கும் : சொத்துக்களுக்கும் பின்னால் எத்தனை கதைகள் தான்...

சேர்ந்து வாழமுடியாமல் பிரிந்து வாழக் கேட்ட தமிழனுக்கு நேர்ந்த கதி இது. நாடு சுதந்திரம் பெற்ற பின்பு நடுநிலையற்ற அரசு தாண்டவமாடியதால் நாதியற்ற தமிழன் துணிந்து நின்றதால் வந்த துயரச்சம்பவங்கள் இது. ஆற்று நீர் வற்றிப்போவது போல் ஆடிப்பாடித் திரிந்த தமிழன் தன் உறவுகளைப் பறிகொடுத்து அயல்நாடுகளில் அகதி அந்தஸ்து பெற்று வாழும் அவலவாழ்விலும் யாரும் தீர்த்துவைத்து இன்னும் தான் முடிவுரை எழுதப்படாமலேயே இருக்கும் எங்கள் நிலமை இது.

பலாலியில் இருந்து பார்க்க வேண்டி யாழ். நகரையென வழித்தெடுத்த வலிகாமத்தின் வலிதெரியா இராணுவ இராயகம். என்னவிந்தையடா அவனுக்குப் பார்க்கும் பொருள் இருக்கக்கூடாது என்பதற்காக அழகினை அழித்தானா. அல்லது யானையில் சென்று தீர்ப்பெழுத வீடு பிரித்து வீதி சமைத்த விந்தையான பழையகதைக்கு உயிர்கொடுத்த பரம்பரைவழி வந்தானா?

தனியொரு இராணுவவீரரின் தலைவலி தீர ஆதிகோவிலடி வல்வெட்டித்துறையில் இருந்து பருத்தித்துறை தெரியவேண்டும் என்பதற்காக அழித்திடித்த அத்தனைத் தமிழனின் வீடுகளும் சொத்துடமைகளும் சாட்சி சொல்லும் அத்தனைக்கும் ஆவணச்சான்று உண்டு.(அதில் ஒன்று இரண்டு ஆவணக்குறிப்புக்களோடு பிரசுரிக்கப்பட்டுள்ளது).

தமிழனுக்கு அழகுதந்த வள்ளுவனுக்கும், பாட்டினால் பரவசமூட்டிய பாரதிக்கும், பெண்புலவர் ஒளவைக்கும்சிலைவடித்து வைத்த அழகினையே அடித்து நொருக்கிய இராணுவ வல்லாதிக்கத்திற்கு உயிருடன் வாழ்ந்த தழிழன் சிம்ம சொப்பனமாக இருந்தமையால் அவனது வீடுகள் இடிக்கப்பட்டன. இல்லை அவனது காவலரனுக்கு கவசமானதும் தமிழனின் வீடுதான். கேட்க யாருமற்ற நினைப்பில் தயவுதாட்சணியம் பாரத செய்த கொடுமையால் திருத்தியிருக்க திராணியற்ற தமிழன் திக்கெல்லாம் பெற்ற பெயர் அகதி வாழ்வு. இத்தனைக்கும் மத்தியில் குப்பி விளக்கெடுத்து தப்பில்லாப் படிப்புமுடித்து தரணியிலே பட்டம்பெற்று தாய்மண்ணில் சேவைசெய்ய முடியா பரிதவிப்பு. தமபி தங்கையோடு கூடி வாழ முடியாத அவல வாழ்வு.

காலையிலே கிபீர் குரல் கொடுத்து துயில் எழுப்பும் சுப்பிரபாதம் கேட்டெழும்ப, மின்சாரம் தடைவிதிப்பு , பால்மா இன்றி பச்சிளம் குழந்தை பரிதவிப்பு, பொருளாதார பரிதவிப்பு பார்த்துக் கொண்டுதான் இருந்தன. இத்தனை நாடுகளும் அகதியாய்போன தமிழன் அனுப்பியது பணம் அவன் வங்கி மூலம்தானே. ஆனால் இன்றோ சிங்கள அரசுக்கு நிதியுதவி நிலத்தில் இறக்கி வைக்க

இடமில்லை. இன்றும் தமிழன் மட்டும் அழிந்திருந்தால் தாங்கிவருமா இந்த விமானங்கள்? இல்லையென்றால் இருபது ஆண்டுகளாய் எங்கே சென்றன? தமிழன் உயிரென்றால் தரணியில் வேறுபெயரோ?.

அழிவுக்குப் பெயர்தான் மாறியதே ஒழிய அழிந்தவை வீடும் உயிரும் சொத்துடமையும் தான். இரண்டின் அழிவினையும் படம்பிடித்துக்காட்டினால் மறுத்துப்பேச யார்வருவார்?. எதுகைமோனை ஒன்றுதான். பாரதி இன்றிருந்தால் பாட்டுக்குள் இடிபாட்டைப் போட்டே பாலம் அமைத்திருப்பான். இடிபாட்டுக்குள் அன்றும் இறந்த உடல் எடுத்தோம். இன்றும் ரேதண்டினோம். காயப்பட்டவருக்கு அபய ஒலி எழுப்பி ஓடிய வாகனங்கள் இன்று எமக்கு அதிசயத்தைத் தரவில்லை. வைத்திய சாலையில் கடமைபுரியும் வைர நெஞ்சங்கள் வாடி நொந்திடவில்லை. பரீட்ச்சயத்தில் பக்குவப்பட்ட ஆன்மாக்கள் தான் தமிழர்கள் உலகிற்கு அழிவின் பாடம் புதிது. ஆனால் தமிழனுக்கு அழிவின் பாடம் பழையது. அவனுக்குத் தைரியமே அதுதான்.

உலகின் மமதையை ஒருகணம் உலுப்பிவிட்ட அந்த ஆழிப்பேரலை தனக்கென ஒரு பெயரையும் தத்தெடுத்தது "சுனாமி" என்று அது உலகின் பொதுமொழிச் சொல்லாக வரலாற்று வரிகளில் தடம்பதித்து நிற்கிறது. யப்பான் நாட்டுக் கடற்கரைகளில் தவழ்ந்து விளையாடிய சொல் இன்று உலகின் மூலை முடுக்கெல்லாம் வி'பரூபம் எடுத்து மனித நேயத்தின்முன் மகத்தான சக்திப்பிரளையமாகக் காட்சியளிக்கின்றது? காற்றோடு கலந்துவிட்ட மணம்போல் உலகின் காணும் இடத்தையெல்லாம் சுவீகரித்து கலியுகத்தின் இன்றைய நாட்களின் இன்னொரு சக்தியாக இடம்பிடித்துவிட்டது இச்சுனாமி.

இந்துமாகடலில் எங்கோ 9.0 ரிச்டரில் பூமிக்குள் ஒரு உலுப்பல் அதிலே உருவான சுனாமியே இனம் பார்த்தாயா? மதம் பார்த்தாயா? ஏழை பணக்காரன் பார்த்தாயா? இல்லை நாடுதான் பார்த்தாயா? உண்மையில் நீயன்றோ சமத்துவ வாதி. உனக்கு நிகர்நீயே. மனித சாதனைகளுக்கே சவால் விடுத்து தட்டிக்கேட்க யாருமன்றி மரணத்தின் வாசலையே அகலத்திறந்து விட்டு வேடிக்கை பார்த்தாயே?

ஒரு நிமிடம் சிந்திக்க ஏன் மறுத்தாய்? கடல் அன்னையே தாய்க்கு எத்தனைபேர் உண்டோ அத்தனையும் உனக்கு வைத்து கடல் அன்னை கடல் மாதா என்றெல்லாம் அழைத்தோம். மலைபோல் வந்த துன்பங்ளையெல்லாம் தம்தோள்மீது சுமந்த நம் உறவுகளின் கடந்த காலப்போரின் வடுக்கள் காய்வதற்குள் நம் உடன் பிறப்புக்களை மட்டுமல்லாது உலகின் பிராந்திய நாடுகளின் கரைகளிலுள்ள பல ஜீவ ராசிகளையும் உன் ரேலையால் அழித்துத் துவைத்து அவர்களை அவர்கள் வாழ்வை நிர்வானமாக்கினாயே. இது நியாயமா? இக்கொடுமையைப் புரிவதற்காக உன் உதரத்தில் உதித்தான் சுனாமி என்ற அரக்கன்.

சுனாமியே உனக்குத்தான் இது சமர்ப்பணம். ஏய் சுனாமியே எம்மவர்க்கு அழிவொன்றும் புதிதல்ல. அழித்துத் துவைத்த ஒரு நிமிடம் வேறாகலாம். ஆனால் குமுதினிப்படகில் நடந்த கொடூர நிகழ்வு இன்றும் எம்மனதில் நீங்காதிருப்பதை நீ அறிவாயா? இடிபாடுகளைத் தந்தாயே. வழிபடும் ஆலயங்களைத் தகர்த்தாயே. பாடசாலைகளை இடித்து ஒடித்தாயே. அதனையும் நாம் கண்டோம். நவாலியிலும் நாகர்கோவிலிலும் புதிதாக என்ன செய்தி கொண்டு வந்தாய்? வயது பேதமின்றி வதைத்துத் துவைத்து அவர்கள் கதை முடித்தாயே. அதனையும் நாம் கண்டோம். வல்லைப்படுகொலையிலும் யாழ். வைத்தியசாலையிலும் கண்டவர் நாம்.

உனக்கொரு விடயம் தெரியுமா பொம்பர் ஒலியுடன் வரும் அரக்கனையே எதிர்கொண்டு பழக்கப்பட்டவர் எம்மவர்கள். மீண்டும் அவன் வந்து விட்டானோ என்னவோ என்ற உணர்வில் நீவருகையில் பலர் ஏமாந்து போனார்கள். அதற்கேற்ப நிலத்தில் வீழ்ந்தும் வீட்டினுள் மறைவிடம் தேடியும் நின்றனர். ஆனால் நீயோ அதே ஒலி எழுப்பிய வண்ணம் வேறு உருவில் வருவாயென யார் நினைத்தார்கள். உன்கோலம் முன்பே தெரிந்திருந்தால் அப்படிச் சென்றிருக்க மாட்டார்கள். ஆமிதான் திடீர்த்தாக்குதல் என்றால் நீயுமா சுனாமி? இது வடக்குக்கிழக்குக்கு மட்டும் தான். தென்னிலங்கைக்கு தெரியாததொன்று. மேலும் ஓடும் புகைவண்டியைத் தென்னிலங்கையில் தடுத்து நிறுத்தி ஆட்டம் காட்டினாய். அதையெல்லாம் நாம் முன்பு கண்ட காட்சி என்பதை ஏன் அறியமறந்தாய். புதிதாக நீ எதனைக்கொண்டு வந்தாய்.

சுனாமியே நீ ஒருமாதக் குழந்தைதான். ஆனால் நாம் உன்னை நிச்சயமாக சிறு குழந்தையாக மதிக்கமாட்டோம். சூரனை அழிக்கப்புறப்பட்ட முருகப்பெருமான் போல் உன் அளப்பெரிய சக்தியை மதிக்கின்றோம். குறைத்து கணிப்பிட வில்லை. ஆனால் அங்கு நல்லவர்கள் தேவர்கள் காக்கப்பட்டார்கள். நீ அப்படி இல்லையே? அதனால் மீண்டும் சமர்ப்பண வரிகளை நினைவு படுத்துகின்றோம்.

பாலங்கள் பாதைகளை தகர்த்தாய். போக்குவரத்து இடர் விளைவித்தாய் அஞ்சினோமோ? இல்லையே வாழ்நாளில் எத்தனை தடைகளை நாம் தாண்டி உறவுகளை அணைத்தவர்கள் சலிக்காமல் பயணம் செய்தவர்கள். கடந்த காலப் பக்கங்கள் இதற்குப் பதில் சொல்லும்.

அகதி முகாம்களை உருவாக்கினாய் அந்த அனுபவங்களை இன்றும் சுமந்திருக்கும் எத்தனை மக்கள் இந்த வரிக்குச் சாட்சியளிக்க வருவார்கள் என்பதை நீ அறிய மறந்ததேனோ?

அரசு மக்களுக்கு தடைவிதிக்கிறது. கடற்கரையில் இருந்து குறிப்பிட்ட தொலைவுக்கு அப்பால்தான் மீண்டம் குடியமர முடியும் என்று கடந்த இரண்டு தசாப்த்தமாக வலி கிழக்கில் வளமான பூமியில் என்ன நடந்தது என்பதை உறுதி செய்து கொள். ஒப்பிட்டப் பார்க்கையில் நீயும் இலங்கை அரசுக்கு துணையாக வல்லவோ வந்து போனாய். மீண்டம் வருவாயோ நாம் அறியோம். இலங்கை அரசுபோல் நீயும் வருந்த மாட்டாய். ஒருமாதக் குழந்தை தானே. சாணக்கிய அறிவு தலையை நிரப்பியிராது.

சுனாமியே என்ன கொடூர இதயம் உனக்கு. இறந்தவர்களைப் புதைப்பதற்குக் கூட அவகாசம் கொடக்காது அவர்கள் வெற்றுடல் உக்கி நிக்க வைத்தாயே. இந்தக் காட்சிகளில் எல்லாம் ஏற்கனவே நாம் கண்டதனால் இப்போது நீ தந்த கொடுமைகளையும் தாங்கி நிற்கின்றோம். வேற்று நாட்டு இராணுவம் வருவதற்குள் கல்லறைகளை நாமே தோண்டி விட்டோம்.

“கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜயோகம்” என்பது சோதிட மரபு. இது யாருக்கும் பொருந்தா விடினும் இலங்கையரசுக்கு உயிர்த்தடிப்புள்ள வரிகள்.... சுனாமியே அடித்துச் சென்ற கற்களில் கரையொதுங்கிய கல்வெட்டுச் சுமந்த வாக்கியம். இது பசியால் நொந்தவனுக்கு பால் பாயாசம் கலந்த அறுசுவை உணவு கிடைத்தது போலல்லவா உள்ளது இலங்கை அரசுக்கு.

தென்றல் காற்று புயலாக மாறுவதுண்டு. புயலுக்குப் பின் அமைதி வருவதும் உண்டு. நாடு நலம் பெற அந்த நல்ல வேளை இப்போது வந்து நிற்கிறது. நேசக்கரம் நீட்டும் நமது கால்களின் பாதையில் நெருஞ்சி முட்களை விதைப்பதும், நெருப்பாற்றை கடந்தவர்கள் நெஞ்சினில் நஞ்சைக்கக்குவதும் இப்போது சாணக்கியமற்ற செயல். இதை அரசுக்கு இடித்துக் கூறவே இந்த சமர்ப்பண வரிகள்...

எத்தனை வாகனங்களை உருட்டிச்சென்றாய். உலகு அதனைப்படம் பிடித்த அற்புதக் காட்சிகளை தினம் தினம் பார்த்திருப்பாய். அதுபோல் எத்தனை கருகியது. எமக்குப் பழைய பாடங்கள்.

எங்கள் உறவுகளின் அழகிய முகங்களில் சேற்றை வாரிச் சுருட்டி உன்னுடைய நீல நிறத்தை கரிய நிறமாக்கிப் பூசி அசிங்கமாக்கினாயே. அது கூட பீப்பாய் பீப்பாயாகக் கொட்டிப் பார்த்தார்கள். பலனளிக்கவில்லை என்பதும் படித்து முடிந்த கதை.

மொத்தத்தில் தாய்மைக்கு உலகமே மதிப்பளிக்கும் தன்மையை படம் பிடித்துக்காட்டவா பல தாய்மார்கள் தமது குருத்துக்களை அணைத்தவாறு மரணத்தை அரவணைத்ததைப் படம் போட்டுக் காட்டவைத்தாய். இல்லை ஒன்றை நினைவூட்டவே அவர்கள் அப்படிச்செய்தார்கள். ஏனெனில் சுனாமியால் அநாதையாக்கப்பட்ட குருத்துக்களின் கண்ணீர் வரிகளுக்குள் தமது செல்வங்களின் கதைகளும் அடங்கக் கூடாதென்பதற்காகவே அவர்களோடு வந்த தொப்புள் உறவினைத்தப்பவிடவில்லை. அந்த மரணத்திலும் மதிமயங்கா மாணிக்கத் தெய்வங்கள். அவர்களுக்க சிலையெடுத்தால் திரம்பி நீ வருவாய். சீரழிந்து அவர் கதை முடிப்பாய் வெட்கத்தால் வேறு என்னதான் உன்னால் முடியும்.

மீண்டும் நீ வருவாயெனப் பயப்பிராந்தி உலகின் மனதில் எழுகிறதே. அத்தனை கொடிய அனுபவத்தைக் கொடுத்த சுனாமியே! நீ சொல்ல மறந்தது ஒன்று இருக்கிறதே. நமது நாடு சீரழிந்தும் கற்றுக்கொள்ள மறுக்கிறதே. அமைதி வேடம் போட்டு உலகினை ஏமாற்றும் வித்தைக்கு இடம் கொடுத்தது தான். கொட்டிக் குவிகிறது நிதியுதவி. தட்டிப்பறித்து தாமே ஏப்பம் விடுகிறது. எமது நெஞ்சினில் எழும்கேள்வி இது. இத்தனை பார்த்தும் இன்னும் இலங்கை அரசை நம்பியிராமல் அவர்களது நிவாரணங்களை எதிர் பாராமல் புதிய கட்டுமானங்களை எண்ணியிராது நமது வாழ்வை நாமே சீரமைத்துக் கொள்வது தான். கைகொடுக்க இதயங்களா இல்லை? புலம்பெயர்ந்து வாழும் நம் உறவுகள் இருக்கிறார்கள்.

அறளையினால் அலட்டுவதை அப்படியே பார்த்திருக்கும் உலகு ஒரு குழந்தையை தத்தெடுத்தால் நம்பிவடுவதா? ஒரு பாணை சோற்றுக்கு ஒரு சோறு பதமாகலாம். தெரியாமல் இல்லை. தூய மணலில் செயற்பாடாயின் விட்டுவிடலாம். வேடம் போட்டு ஒரு குடம் பாலை துளி விடம் போட்டுக்கொடுக்கையில் பார்த்தக்கொண்டிருக்க முடியுமா? சட்டம் போட்டுத் தடுக்க முடியாத பதவியில் இருக்கும் தைரியம் கைலாகு கொடுத்து புகைப்படம் பிடித்து ஊடகங்களை துணைக்கு ழைத்து ஆடும் நாடகம் தான் ஏன்? ஆதிகோவிலடி ( வல்வெட்டித்தறை) முதல் முல்லைத்தீவு வரை மக்கள் மனதினை படம்பிடித்து அவர்கள் நெஞ்சினில் இடம்பிடித்தால் ஊடகமும் தேவையில்லை. அவர்கள் அதனைக் கோவிலாக்கி, மணியோசை எழுப்பி உலகையே அசைத்து விடுவார்கள். அந்தச் செய்தியை சொல்ல ஆயிரம் அன்னபூரணிகளை (வல்வையில் இருந்து அமெரிக்கா சென்ற பாய்மரக் கப்பல் ) கட்டியெழுப்பி உலகின் நாலாபுறமும் அனுப்பி விடுவார்கள்.

காலம் போவதற்குள் கட்டுமானங்கள் தொடரக்கைகொடுக்கும். கரங்களைப்பற்றிக்கொள்ள 17. 01.2005 இல் நமது தேசியத்தலைவரால் கூட்டப்பட்ட புத்திஜீவிகளின் கூட்டமே அத்திபாரமிட்ட நாளாகும். அதுவே உலகின் உறக்கத்தைத் தட்டி எழுப்பி நிற்கும் நாளாக உருவெடுக்கும். உலகின் கண்களை எத்தனை நாட்களுக்கு பார்க்க முடியாது தடுத்து வைக்க முடியும். ஒரு நாள் வெளிச்சம் போட்டுக்காட்ட முடியாமலா போகும்.

எதிரி வீட்டிலும் இனிய உணவு புசிக்க வேண்டும் என்ற இதயம் படைத்தவர்கள் நாம். காலம் காலமாய் அரசு இத்தனை டிசய்த போதும் அன்புப்பாலம் அமைத்தவர்கள் நாம். அமைதிவழியை தேடிக்கொண்டிருப்பவர்கள் நாம். இங்கே உறவுகள் இப்படி இருக்க தேடி ஓடலாமா இராணுவ பலத்தை சமப்படுத்த முடியா முயற்சிக்கு முந்தானை கட்டலாமா.

# “மீண்டும் இலங்கை எரியும்” என்று சொன்னதை செய்த இந்திய இராணுவம்

வல்லரசுப படுகொலையின் 17 வது ஆண்டு நினைவை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.

1919 ஆம் ஆண்டு ஏப்பிரல் 13 ஆம் நாளன்று இந்தியாவின் அமிர்த சரஸ் நகரிலே ஜெனரல் ரயர் தலைமையில் ஆங்கிலேய இராணுவம் நடாத்திய மனிதப் படுபொலையை விட மிகப் பயங்கரமான படுகொலையானது 1989 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 2, 3, 4, ஆம் திகதிகளில் நடாத்தியிருக்கிறது. அகிம்சை வழி சுதந்திரம் கண்ட அண்ணல் காந்தியின் வழிவந்த காங்கிரஸ் கட்சி ஆட்சி புரிந்த இந்திய உபகண்டத்தின் இராணுவம்.

வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவம் நடாத்திய இப்படகொலையை வியட்நாமில் இடம்பெற்ற மயிலாய படுகொலைக்குச் சமமாக ஒப்பிட்டிருக்கிறார். ஜனதாக்கடசியின் தலைவர்களின் ஒருவரான ஜார்ச் பெர்னாண்டஸ். வியட்நாமிலே மயிலாய என்ற இடத்தில் அமெரிக்க இராணுவம் நடத்திய காட்டுமிராண்டித்தனமான படுகொலையை உலகமே கண்டித்தது. ஆனால் வல்வெட்டித்துறையிலே இந்திய அரசு நடாத்திய இப்படகொலைச் சம்பவத்தை திட்டமிட்ட மறைத்தது பெரும்பாலான இந்திய பத்திரிகைகளும் இப்படுகொலைச்சம்பவத்தை மறைப்பதில் இந்திய அரசுக்கு உறுதுணையாக நின்றன.

ஆனால் இப்படுகொலைச்சம்பவம் நிகள்ந்த 13 நாட்களுக்குப்பின் வல்வெட்டித்துறைக்குச் சென்றலண்டன் பைனான் ஸியஸ் டைம்ஸ் பத்திரிகையில் டெல்லி நிருபர் டேவிட் ஹவுஸ்கோ இச்சம்பவம் பற்றிய முழுவிவரங்களையும் முதன்னுதலாக தமது பத்திரிகையில் வெளியிட்டதைக்கண்டு உலகமே அதிர்ச்சியடைந்தது.

1989 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி காலை வல்வெட்டித்துறைச் சந்தைச்சதுக்கத்தில் எதிர்பாரத விதமாக விடுதலைப்புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்கும் இடையே ஏற்பட்ட மோதலில் ஆறு இந்திய வீரர்கள் இறந்ததுடன் 11 பேர் காயமடைந்தனர்.

இதையடுத்து வல்வெட்டித்துறையைச் சுற்றி இருந்த மூன்று இராணுவ முகாம்களில் இருந்த ஆயிரக்கணக்கான இந்திய இராணுவத்தினர் வெறியுடன் புறப்பட்டு வல்லெட்டித்தறையை சுற்றிவளைத்தனர். உடனடியாக ஊரடங்குச்சட்டத்டதைப் பிரகடனப்படுத்தினர் மூன்று நாட்களுக்கு அச்சட்டம் நீடிக்கப்பட்டது. வீடுகளை விட்டு வெளியே வராமல் அச்சத்துடன் பதுங்கியிருந்த மக்களை கதவுகளை உடைத்து உட்புகுந்த இராணுவம் பதறப்பதற சுட்டுக்கொன்றது. இந்த வெறியாட்டத்தில் 63 பேர் படுகொலை செய்யப்பட்டனர். நூற்றுக்கணக்கானவர்கள் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்களுக்கு மருத்துவ உதவி வழங்க முன்வந்த பிரான்ஸ் மரத்தவக்குழுவினரை ஊருக்கள் நுழையவே இராணுவம் அனுமதிக்கவில்லை.

மொத்தம் 123 வீடுகள் அடியோடு நாசமாக்கப்பட்டன. 45 கடைகளட எரிக்கப்பட்டன. 12 மீன்பிடிப்படகுகள் நாசம் செய்யப்பட்டன. 176 மீன்பிடி வலைகள் எரியூட்டப்பட்டன. வீடுகளில் இருந்த பணம் நகை மின் உபகரணங்கள் இந்திய இராணுவத்தால் கொள்ளையடிக்கப்பட்டன , ஏராளமான பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

இந்த நிகழ்ச்சி நடப்பதற்கு சில மாதங்களுக்கு முன்னர் இந்தியப் பிரிகேடியர் சங்கர் பிரசாத் மக்கள் குழு உறுப்பினர்களை அழைத்து பினவருமாறு கொக்கரித்தார்.

இந்திய இராணுவம்மீது புலிகள் தாக்குதல் மேற்கொண்டால் உங்கள் ஊரை அடியோடு எரிப்பேன். நூற்றுக்கணக்கில் மக்களை சுட்டுத்தள்ளுவேன். இராமாயணத்தில் இலங்கை எரிக்கப்பட்டது போல மீண்டும் எரியும். எங்களை யாரும் எதுவும் செய்யமுடியாது. நாங்கள் உலகின் நான்காவது பெரிய இராணுவம்.

அவர் மிரட்டியதைப்போலவே சில நாட்களில் அழகிய வல்வெட்டித்துறை சுடுகாடானது. வல்வெட்டித்துறையால் மட்டுமல்லாது அங்கிருந்து இரண்டு கிலோமீற்றர் தொலைவில் உள்ள ஊரணி,

பொலிகண்டி ஆகிய இடங்களிலும் இந்திய இராணுவத்தின் வெறியாட்டம் இடம்பெற்றது.

வல்வெட்டித்துறையில் மூன்றுநாட்கள் நாவேட்டையில் நடத்திய இந்திய இராணுவம் தனது வெறியாட்டத்தை திட்டமிட்ட மறைத்தது ஜனதா தளப் அபாதுச்செயலாளர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் இப்பிரச்சினையை அம்பலப்படத்துவதில் முன்னின்றார். இப்படகொலை பற்றிய ஆதாரங்கள் புகைப்படங்கள் ஆகியவற்றை தொகுத்து ஆங்கிலத்திலும் தமிழிலும் ஹிந்தியிலும் நூலாக வெளியிட்டு இந்தியாவில் மட்டுமல்ல உலகெங்கிலும் அம்பலப்படுத்தினார். இதனால் ராஜீவ் காந்தி அரசின் முகமூடி அழிந்தது. இரட்சகர்கள் எண்ணிய இந்திய இராணுவத்தின் இடைசபதம் வெளியானது.

# உலகை உலுக்கிய வல்வைப் படுகொலைகள்!

அன்று 1989 ஆகஸ்ட் இரண்டாம் திகதி அன்றைய பொழுதும் வழமையான எதிர்பார்ப்புக்களுடன் தான் புலர்ந்தது. எமது இரட்சகர்கள் என்னும் நம்பிக்கையுடன் எம் மண்ணில் தடம்பதித்த அமைதிப்படையினர் எமத உயிர்களைக் காவுகொள்ளும் யமதர்மர்களாக உலாவந்துகொண்டிருந்தனர். ஆம்! அன்றைய நிகழ்வுபற்றி இந்தியன் எக்ஸ்பிரஸ் பின்வருமாறு கூறுகின்றது. "இந்திய அமைதிப்படையினர் தமது வீரர்கள் ஆறுபேர் விடுதலைப்புலிகளினால் கொல்லப்பட்டமையைத்தொடர்ந்துஎதிர்நடவடிக்கைணில் ஈடுபட்டதில் நிராயுத பாணியான ஐம்பதுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டும் 12 பேர் காணமற்போயும் 123 வீடுகளும், மீன்பிடி உபகரணங்களும், சைக்கிள் உட்பட 50 மேற்பட்ட வாகனங்கள் எரிக்கப்பட்டும் உள்ளன. வல்வெட்டித்துறை பாலைவனமாகக் காட்சியளிக்கிறது. சனத்தொகைகளில் அரைவாசிப்பேர்இடம்பெயர்ந்து அயற்கிராமங்களுக்குச் சென்றுவிட்டனர்."என்கிறது.

வல்வை நகரைப்பொறுத்தவரையில் இந்தப்படுகொலைகளைப் பொறுத்தவரையில் இந்தப்படுகொலைகள் ஒரு வரலாற்றுப்பதிவு மட்டுமன்று யூலியன் வாபாலாக், மைலாய் படுகொலைகளிற்கு இணையானது. இப்படுகொலைகள் இடம்பெற்ற நாள் முதல் மூன்றுநாள்கள் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இந்தப்படுகொலைகள் தொடர்பான விவரங்கள் வெளியே தெரியாதவாறு மூடி மறைக்கப்பட்டன. அத்துடன் வைத்திய குழுவினைக் கூட அங்கு செல்வதற்கு அனுமதிக்கவில்லை. இங்கு ஆழ்ந்து நோக்கவேண்டிய மேலுமொரு அம்சம் என்னவெனில் இந்திய சுதந்திரப்போரின் உத்தம தியாகிகள் என்று போற்றப்பட்ட மகாத்மாகாந்தி, நேரு, சுபாஸ்சந்திரபோஸ், போன்றோரின் நிழல்ப்படங்கள் எரியுண்ட வீடுகளில் இந்திய மண்ணின் இராணுவத்தால் அடித்து நொருக்கப்பட்டன.

இது நடைபெற்றும் 17 ஆண்டுகள் நிறைவுபெற்று விட்டன. இன்றுவரை வல்வைமக்களைப் பொறுத்தவரை அழியாத வடுக்களாய் நின்று நிலைத்திருக்கும் துன்பியற் சம்பவம் இது. ஆனால் இந்தப் பின்னணியில் நின்றுகொண்டு சமகால அரசியல் பின்புலத்தில் இந்தத் துயரச்சம்பவம் மறக்கமுடியாத ஒன்றாக அமைந்த போதும் இந்தியாவின் அண்மைக்காலப் போக்குகளையும் கரத்தில் கொள்ளப்பட வேண்டியது முக்கியமானதாகும். தமிழர் விடுதலைப் போராட்டம் தொடர்பாக அண்மைக்கால இந்தியாவின் உளப்பாங்கில் சில மாற்றங்கள் சாதகமாக ஏற்பட்டிருப்பதை காணமுடிகிறது. அதேவேளை, விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் முன்னால் இந்தியப்பிரதமர் ரஜீவ்காந்தியின் கொலைதொடர்பாகத் தெரிவித்த கருத்துக்கள் இதற்கு மேலும் வலுச்சேர்க்கும் நிலையொன்றை ஏற்படுத்தியுள்ளன. இதேவேளை, தமிழ்நாட்டில் மாநில அளவில் ஈழத்தமிழர் தாயகப்பகுதிகளில் கொலைகளைக் கண்டித்து அமைதியான ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடைபெற்றன. உலகில் அரசியலைப் பொறுத்தவரை நிரந்தர நண்பனுமில்லை நிரந்தரப் பகைவனுமில்லை என்ற கருத்தும் இங்கு மனங்கொள்ளப்பட வேண்டும்.

இச்சந்தர்ப்பத்தில் "சேடமிழுத்துக் கொண்டிருக்கும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் மீண்டும் நிலையான உறுதியைப் தொடரவும் ஈழத்தமிழரிற்கு கௌரவமான தீர்வொன்று

எய்தப்படவும் இந்தியா இதயசுத்தியுடன் தனது உதவியினை தொப்பிள் கொடி உறவு என்ற உன்னத நிலையில் நின்று தமது சகோதரர்கள் சுயமரியாதையோடு வாழும் ஒரு தீர்வுக்கு பங்களிக்க வேண்டியது காலத்தின் கட்டாயம் மட்டுமன்றி இன்று நினைவுகூரப்படும் வல்வைப் படுகொலை நாளில் தனது கடந்தகால கறைகளைக் கழுவிட இது தருணமாக அமைந்தாலும் கூடும்.

## பாரத மாதாவுக்கு ஒரு விண்ணப்பம்

பாரத நாட்டிற்கொரு வேண்டுகோள்!

02.08.1989 இல் வல்வை நகரைச் சுடுகாடாக்கிய அந்தப்பயங்கரச் சம்பவங்களை நினைக்க நெஞ்சம் வெடிக்கும் போல உள்ளது. 1 1½ வயது சிசு உட்பட 70 வயது மூதாட்டிவரை வெட்டியும் சுட்டும் உயிருடன் எரித்தும் இந்திய அமைதிப்படையினர் படுகொலை புரிந்தனர்.

இந்த வெட்கம் கெட்ட படுகொலைகளை சில சர்வதேச ஊடகங்கள் "அமெரிக்க இராணுவத்தால் வியட்னாமில் நடத்தப்பட்ட மையலாய் படுகொலைகளையும் " இந்தியாவில் ஆங்கிலேயரால் அமிர்தசரசில் நடத்தப்பட்ட ஜாலியன் வாலாப் படுகொலைகளையும் " விடக் கொடூரமானவை என வர்ணித்தன.

3 நாள்கள் தொடர்ந்து இந்த வெறியாட்டம் நடந்தேறியது.

இதற்கெல்லாம் பிராயித்தம் வேண்டுமா? இச்சம்பவத்தின் பின் அடுத்த பரம்பரையில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

இன்று உள்ள இந்திய அரசானது ஏன் பாராமுகமாக இருக்கிறது?

பாரத தேசம் தன் நாட்டின் தலைமைப்பதவியில் முதன் முதலில் ஒரு பெருமைக்குரிய பெண்ணைத் தேர்ந்தெடுத்து, ராஜ்ய பவனில் விழா எடுத்துள்ளார்கள். அதே வேளை மொழி வேறுபாடு, இன பேதமற்ற மதசார்பற்ற, தலைசிறந்த விஞ்ஞான மேதையான டாக்கடர் அப்துல் கலாம் அவர்கள் இந்தியாவின் முதல் மனிதனாக இதுவரைகாலமும் இருந்துவிட்டு அமைதியின் வடிவமான, எழிமையின் உருவமாக தன் வாசஸ்தலத்திலிருந்து இரண்டே இரண்டு சூட்கேஸ் பெட்டிகளை (புத்தகங்கள்) எடுத்துக்கொண்டு வெளியேறியது அகில உலகிலும் பலரது பார்வையை ஈர்த்தது. அது இந்திய நாட்டு மக்களுக்குக் கிடைத்த கௌரவமாகும்.பார்வையிலே எழிமையான மனிதர் அடக்கத்தின் முழு வடிவம் அமைதியாகக் கூறிய வார்த்தைகளில் சமுதாயத்தை மதிக்கும் பண்பு தான் ஒரு முஸ்லிமாக இருந்தபோதிலும் இந்துமதத்திலுள்ள உண்மையை வெளியுலகிற்கு உதாரணமாகக் காட்டிய தன்னிகரற்ற தன்மை, அவரது இடத்தை, பதவியை வகித்திட வந்திரக்கும் பிரதீபா பட்டேல் அம்மையாரின் உள்ளத்தையும் கவர்ந்திருக்கும். அவரும் தனது பதவிக்கு மேலாக இந்தியாவின் பெருமையைப் பாதுகாத்து விளக்குவார் என்பதாலேயே அப்பதவியில் அமர்த்தப்பட்டள்ளார்.

இவ்வாறான பெருமைகள் பெற்ற பாரத மாதாவிற்கு பூகோளரீதியாகவும் உறவாலும் அருகே இருக்கும் ஈழத்தமிழர்கள் சிந்தும் கண்ணீர், வாழும் அவல வாழ்க்கை கடந்த மூன்று சகாப்தங்களுக்கு மேலாக ஓர் உறுதியான முடிவை எடுத்து எமது பிரச்சினையைத் தீர்த்து வைக்காமையால் இன்றும் கொழுந்து விட்டெரிகின்றது.

ஈழத்தமிழர்கள் மீது கரிசனை கொண்டு இந்திரா காந்தி அம்மையார் காட்டிய அக்கயை அனைத்தும் அவரது அகாலமரணத்தின் பின்பு அதுவும் அக்கினியுடன் சங்கமமாகி விட்டது. அங்கே மாறிவரும் தலைவர்கள் தங்கள் நாட்டிற்கு பெருமை தேடித்தர எத்தனையோ மொழிபேசும் அனைவரையும் பேதமற்ற நிலையில் ஆட்சி

செலுத்தும் போது, இங்கு சிறீலங்காவில் மாறி மாறி வரும் தலைவர்கள் தங்கள் காலங்களில் தொடர்ச்சியாக கட்டவிழ்த்து விடுகின்ற இனப்படுகொலைகளால் அவர்களது ஈனச்செயலால், அரச அட்டூழியங்களால் இராணுவக்கெடுபிடிகளால் புலம்பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை அதிகரிப்பால் உலக நாடுகளின் கண்கள் திறக்கப்பட்டுள்ளன. எல்லோரும் ஈழத்தமிழர்களுக்காக குரல் கொடுத்த போதிலும் எமது விடிவற்ற பொழுதுகள் தான் இன்னும் நீண்டுகொண்டு செல்கின்றன. படுகொலைகள் பட்டியலிலும் நீழ்கின்றது.

அந்தவரிசையில்,

"வல்வைப் படுகொலை" நடந்து முடிந்து இன்றோடு 18 வருடங்கள் பூர்த்தியாகிவிட்டது. ஆனாலும் அந்தக் குருதிபடிந்த அடையாளங்கள், யுத்தவடுக்கள் அதனைச்சுமந்து செல்லும் உறவுகளால் இலகுவில் மறப்பதற்கில்லை. ஆணினும் இன்று இந்தியா மீது கொண்ட நம்பிக்கையை ஈழத்தமிழர்கள் மறக்கவில்லை.

அமைதிக்காக வந்த அமைதிப்படை அரங்கேறிய " வல்வைப்படுகொலைகள் " யின் பின்னர் சிறீலங்கா அரசு தான் நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலையப்படுகொலை, நாகர்கோவில் பாடசாலைப் படுகொலை, யாழ். பொதுமரத்துலமனைப் படுகொலை, இன்னம் மேலாக மூதூர் தொண்டர் நிறுவனப்பணியாளர்கள் படுகொலை மற்றும் வீதியோரப் படுகொலைகள், மனித உரிமைப்படு கொலைகள், மனிதஉரிமை மீறல்கள், கடத்தல்கள், கப்பம் கோரல் போன்றவற்றால் ஈழத்தமிழர்கள் நொந்துபொயுள்ளனர். அவற்றிலிருந்து தப்புவதற்காக அகதி என்ற அந்தஸ்தைச் சுமந்து பாரத மண்ணிற்கே படையெடுக்கின்றார்கள். தஞ்சமென வந்தவர்களை ஆதரிக்கும் இந்திய தேசம், ஒருமுறை - ஒரே ஒரு முறை தீர்க்கமான முடிவுகளை எடுத்து ஈழத்தமிழர் நலத்தினை உறுதிப்படுத்த முடியாதா? இந்து சமுத்திர பிராந்தியத்தில் நீ ஒரு வல்லரசு அல்லவா இந்தியாவே.

தேவாலயங்ஙள் , வைத்திய சாலைகள், பாடசாலைகள், பழம்பெருமை பேசும் பண்பாட்டுத் தலங்கள் எவற்றையும் வட்டுவைக்காது அவற்றை நிரந்தர அழிவுச்சின்னங்களாகப் பதிவுசெய்து வரும் இலங்கையரசுகள் தான் எம்மை மாறிமாறி ஆட்சிசெய்கின்றன. ஈழத்தமிழர் பிரச்சினையில் இப்போது பாரத மாதா பாரா முகமாக கண்ணை மூடிக்கொண்டிருக்க எந்தவிதமான நியாயமும் இல்லை. தார்மீகப்பொறுப்பை ஏற்று வழிநடத்தி ஈழத்தமிழர் பால் இந்திரா அம்மையார் காட்டிய அக்கறையை அந்த ஒப்பற்ற சீரிய பணியை இனியும் காலம் தாழ்த்தாது எமது அவல வாழ்விற்கு முற்றுப்புள்ளியிட்டு ஈழத்தமிழர் பால் இந்திரா அம்மையார் காட்டிய அக்கறையை அந்த ஒப்பற்ற சீரிய பணியை இனியம் காலம் தாழ்த்தாது எமது அவல வாழ்விற்கு முற்றுப்புள்ளியிட்டு ஈழத்தமிழர்கள் தமக்குரிய - அவர்களிடம் இருந்து பிரிக்க இயலாத - உரிமைகளுடன் வாழ்வதற்குப் பாரத தேசத்தின் கண்கள் விரைவில் திறந்திட வேண்டி நிற்கின்றோம்.

இந்திரா காந்தி அம்மையாரால் தொடங்கப்பட்ட நற்பணியை தற்பொழுது முதன்மைப் பெண் ஸ்தானத்தில் ஜனாதிபதி பிரதீபா பட்டேல் அம்மையார் முடித்துவைக்க முடியாதா? அப்பொழுது தழிழினம் முழுவதும் தலைநிமிர்ந்து வாழும் நிலை உண்டாகாதா? இந்தியாவின் முதன்மைப் பெண் உலகத்தின் அத்தனை கோடி தமிழர்

நெஞ்சங்களிலும் குடியிருக்க மாட்டாரா?

காலம் தாழ்த்தாது இப்பணியை இந்தியா செய்யுமானால் இந்தியாவிற்கும் இந்துசமுத்திரப் பிராந்தியத்துக்கும் ஒரு பாதுகாப்பு ஸ்திரமுள்ள நிலை உருவாகி ஏனைய வல்லரசுகளின் ஆதிக்கத்திற்கும் முடிவு கட்டப்படும் அல்லவா? ஒரு சிறிய தீவாக இருக்கும் சிறிலங்கா அருகிலிருக்கும் வல்லரசுக்கு அச்சுறுத்தலாக ஏனைய நாடுகளில் பல மில்லியன் ரூபாய்களைக் கொட்டி ஆயுதக்கொள்வனவு செய்வது நியாயம் தானா? என்பதனை இந்தியா ஏன் ஆழமாகச் சிந்தையில் எடுக்கக்கூடாது?

உலகில் தமிழன் வாழாத நாடு இல்லை. ஆயினும் தமிழனுக்கென்றொரு நாடு இல்லை. தமிழன் தனக்கென்றொரு அரசை நிறுவுவதற்கும் தன்னைத் தானே ஆழ்வதற்கும் தகுதியற்றவனா?